# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 4 (17-04-1998) வெள்ளிக்கிழமை UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 120


# புலிகளைக் கட்டுப்படுத்த பிரிட்டன் உதவவில்லை!

## காயமடைந்த சிப்பாய் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 17

கடந்த 10 ஆம் திகதி ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு அருகில் படையினர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்கு உள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் குற்றச்சாட்டு

லண்டன், ஏப்ரல் 17

**விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து பிரிட்டிஷ் அரசிடம் நாம் பல தடவைகள் முறைப்பாடு செய்துள்ளோம். ஆனால் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை பிரிட்டனில் கட்டுப்படுத்துவதற்கு பிரிட்டனிடம் இருந்து போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.**

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டிஷ் சர்வதேச நடவடிக்கை தொடர்பான ராஜாங்க நிறுவனம் ஏற்பாடு செய்த கருத்தரங்கில் பேசுகையில் இப்படிக் குற்றஞ் சுமத்தினார்.

லண்டன் றோயல் நிறுவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமரை றொபின் குக் சந்திக்கமாட்டார்!

### பிரிட்டிஷ் அதிகாரி தகவல்

லண்டன், ஏப். 17

பிரிட்டனில் தற்சமயம் விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் றொபின் குக் சந்திக்க மாட்டார் என்று 'றோய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் வந்துள்ள இலங்கை அமைச்சரை றொபின் குக் சந்திக்கப் போவதில்லை என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தாக அச்செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது. (இ-21-3)

முச்சந்தி முனி



அப்ப கதிர்காமரும் விட மாட்டேன் எண்டு தான் நிற்கிறார்...!

## பிரதேசசபை உறுப்பினர் பதவி துறப்பு

மட்டக்களப்பு, ஏப். 17

ஏறாவூர் பிரதேசசபையின் ஐ. தே. க. உறுப்பினர் எம். எஸ். எம். ஹனிபா பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

4 வருட பதவிக்காலம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை புறநகர் கிராமங்களில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு

## நேற்று முதல் அமுல்

திருகோணமலை, ஏப். 17

திருகோணமலை நகரின் புறநகர்க் கிராமங்களில் நேற்று முதல் இரவு நேர உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்படுவதாகப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

இந்த ஊரடங்குச் சட்டம் இரவு 8 மணி முதல் காலை 5 மணி வரை படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத புறநகர்க் கிராமங்களான அன்புவழிபுரம், பாரதிபுரம், வரோதயநகர், சல்லி, சாம்பல்தீவு, அலஸ் தோட்டம், ஆறாம் கட்டை ஆகியவற்றில் அமுல் செய்யப்படும் என்று சம்பந்தப்பட்ட கிராமங்களின் சமாதானக் குழுக்களின் பிரதிநிதிகளிடம் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில காலமாக திருகோணமலை நகரின் புறநகர் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## பாஸ் வழங்கும் புதிய நடைமுறை அமுலில்

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கப்பல் மற்றும் விமான மூலம் செல்லும் பயணிகளுக்கு பாஸ் வழங்குவதற்கு புதிய நடைமுறை நேற்று அமுலுக்கு வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 9 பிரிக்கேட்டுக்கள் மூலம் பாஸ் வழங்கும் இந்த புதிய நடைமுறையின் பிரகாரம் விண்ணப்பம் கையளித்து ஒரு வார காலத்துக்குள் பொது மக்கள் பாஸைப் பெறலாம் என்று யாழ். மாவட்ட சிவில் இணைப்பதிகாரி பிரிகேடியர் ரி. ஜி. திலகரத்தின தெரிவித்தார்.

பிரிக்கேட்டுக்களில் கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் உரிய அனுமதியைப் பெற்றவுடன் யாழ். சிவில் இணைப்பதிகாரிக்கு அனுப்பப்படும் என்றும்—

இணைப்பதிகாரி அவற்றை விமான முகவர்களுக்கு அனுப்புவார் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## லங்கா முடிதவில் ஒரே தடவையில் ஆயிரம் பேர்!

திருகோணமலை, ஏப். 17

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு அடுத்த வார முற்பகுதியில் ஆயிரம் பேர் செல்லக் கூடிய கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கே பொருள் எடுத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன பெண் நோயாளி கிடங்கில் இருந்து மீட்கப்பட்டார்!

யாழ்ப்பாணம், ஏப். 17

காலையில் வார்ட்டில் இருந்து காணாமற்போன நோயாளி ஒருவர் கிடங்கொன்றில் இருந்து பிற்பகல் ஒரு மணி அளவில் உயிருடன் மீட்கப்பட்டார்.

யாழ். போதனாவைத்தியசாலை மகப்பேற்று வார்ட்டில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது.

சுதுமலையைச் சேர்ந்த சிவபாலன் பரமேஸ்வரி (வயது 36) என்ற பெண்ணே கிடங்கில் இருந்து மீட்கப்பட்டவராவார்.

பெப்ரவரி 19 ஆம் திகதி பிரசவத்துக்காக வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு மறுநாள் பிரசவம் நடைபெற்றதாகவும் —

சிறுநீர்க்கோளாறினால் 40 நாள்கள் வார்ட்டில் சிகிச்சை பெற்றபின் ஏப்ரல் 15 ஆம் திகதி மீண்டும் அதே வார்ட்டுக்கு

( 10ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு உதவ நோர்வே தயார்!

கொழும்பு, ஏப். 17

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க பின்னணி உதவிகளை வழங்க நோர்வே அரசு தயாராக இருப்பதாக நோர்வே அரச அதிகாரிகள் அங்கு சென்ற இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிடம் தெரிவித்துள்ளனர் என்று கொழும்புசெய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய அரச, எதிர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அண்மையில் நோர்வே சென்றது.

நோர்வேயில் உள்ள அரசமைப்பு முறைப்படி இலங்கையில் தீர்வுகாண முடியுமா என்று அங்கு ஆய்வுகளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதுகள் குறித்து தென்மராட்சியிலிருந்தே கூடுதலான முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். மாவட்டத்தின் தென்மராட்சி தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்து கைதுகள் தொடர்பான முறைப்பாடுகள் குறைந்து வருவதாகவும்—

தென்மராட்சியிலிருந்துதான் கைது மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பான முறைப்பாடுகள் தமக்கு கிடைத்து வருவதாகவும் — மனித உரிமைகள் ஆணைக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தபால் ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, ஏப். 17

அமைச்சரவைக் குழுவுடன் நேற்று நடந்த பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததையடுத்து—

சட்டப்படி வேலை இயக்கப் போராட்டம் தொடரும் என்று அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கம் நேற்றிரவு அறிவித்தது.

மேற்படி சங்கத்தின் இறுதிக் கோரிக்கைகளாக சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகள் குறித்து அமைச்சரவைக் குழு பேச்சு நடத்தியது.

தற்போதைய அஞ்சல் மா அதிபரை விலக்கி பொருத்தமான வேறு ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை தவிர்ந்த ஏனைய கோரிக்கைகளுக்கு அமைச்சரவைக் குழு அங்கீகாரம் வழங்கியது.

தமது முக்கிய கோரிக்கையாக அஞ்சல் மா அதிபரை விலக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு பதில் கிடைக்கும் வரை போராட்டத்தை தொடரப்போவதாக அவர்கள் தொழில் அமைச்சருக்கு அறிவித்துள்ளனர். (இ-10-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சபாநாதன்

(ஆசிரியர், சபா கல்வி நிலையம், அச்சுவேலி.)

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் சபாநாதன் 15-4-98 அன்று காலமானார்.

இவர் பர்வதாதேவி, பராசக்தி, சண்முகநாதன், யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசிங்கம் சத்தியதேவி, நித்தியானந்தம், திரேசா ஆகியோரின் மைத்துனரும், கிருஷ்ணபிள்ளை, சிவஞானம், சிவராசா, ஐயாத்தம்பி, அருளானந்தம் ஆகியோரின் மருமகனும், சஞ்சீவனின் பாசமிகு மாமனும், சாந்தியின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-4-1998 வெள்ளிக்கிழமை 10 மணிக்கு அச்சுவேலி முழக்கன் சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
தி. பாலசிங்கம்
(மைத்துனர்)

அச்சுவேலி, தெற்கு,
அச்சுவேலி.

(54982)

திருமதி

## பூரணம் சின்னத்துரை

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், நவாலியில் வசித்து வந்தவருமாகிய திருமதி பூரணம் சின்னத்துரை 16 – 04 – 98இல் கர்த்தருக்குள் இளைப்பாறினார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரையின் (சிறாப்பர், இலங்கை வங்கி) மனைவியும், காலஞ்சென்ற ரஞ்சிதமலர், அல்பிரட் நவரட்ணம் (தபால் அதிபர் வவுனியா), நவமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற இரத்தினம் (புகையிரத நிலைய அதிபர்), பஞ்சநாயகி பிரான்சிஸ்கா (அதிபர் யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), பேதுருப்பிள்ளை யேசுதாசன் (ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர் மக்கள் வங்கி கன்னாதிட்டிக்கிளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், நஞ்சனா, ரவீனா, ராதா, ஆனந்தி, வாசுகி, உமாசங்கர், ஆனந்தசங்கர், பிரியா, பிரேமன், கிறிஸ்ரி தெய்வேந்திரன், கிறிஸ்ரீன்றமணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இவரின் இறுதி ஆராதனை இன்று (17-04-1998) அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக நவாலி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
யே. பேதுருப்பிள்ளை
(மருமகன்)

''ஞானவாசா''
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(54983)

## பொன்னையா நடராசா

(Retired R. M. P.)

புங்குடுதீவு பெருங்காட்டைப் பிறப்பிடமாகவும் தட்டாதெரு இரத்தினம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த Dr. பொ. நடராசா 15 — 04 — 1998 அன்று இரவு கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புங்குடுதீவு பிரபல வர்த்தகர் மு. பொன்னையா சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகேசு, இரத்தினம், இராசம்மா, சிவசாமி, சொல்லானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வினிதமலர் (U.K), ஜீவமலர் (U K), ஸ்ரீரஞ்சன், பிரபாகரன், அரவிந்தன் (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகேஸ்வரன் (U K), ஸ்ரீதரன் (U.K), கிருஸ்ணகுமாரி (Canada), சுலோசனா (Canada) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ, விஜயரத்தினம்
(பெறாமகன்)

859 A, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

(54977)

## கோவிந்தர் கந்தையா

காரைநகர் ஆயிலியை பிறப்பிடமாகவும் எட்டியாந்தோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தர் கந்தையா 15 — 04 — 1998 அன்று திருகோணமலையில் காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், சத்தியாம்பாள், பரமேஸ்வரி (கனடா), சிவகுமார் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவலிங்கம், கிறீஸ்கந்தராஜா (கனடா), மோகனாம்பாள் (ஆசிரியை கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சசிதரன், சிறீதரன், ரதீஸ்குமார், பிரியா, பிருந்தா, பிரதீபன், சிவான்ஜன், சுகன்யா, சியாமளா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ''V. சுந்தரமூர்த்தி இல. 15, கஸ்கிசன் றோட் திருகோணமலை'' என்னும் விலாசத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. சிவகுமார்
(மகன்)

(54989)


**சிவா திரையில்**

கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
தினசரி 10-30, 2-30
விஜய் - ரம்பா நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
(54967)

**லிபேட்டி தியேட்டர்**

அச்சுவேலி.
இன்று முதல்
விஜய் - ரம்பா
தேவயானி
மணிவண்ணன்
நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
(புத்தம் புதிய வெளியீடு!)
நேரம்:- 10-30, 2-30
தொலை பேசி இல.
070 - 212223
(54347)

**நாகம்ஸ்**

சினிமா
சுன்னாகம்.
30 அடி அகல
வெண் திரையில்
17 - 04 - 98 வெள்ளி
ரஜனிகாந்த் நடித்த
பாட்ஷா
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(54978)

**புலமைப் பரிசில்**
**1998**

23 ஆவது பரீட்சை
அ கூ. பெறுபேறுகள்
யாழ். மாவட்டம்

1. த. அஜந்தன் யா/இ. ஆ. பாடசாலை
2. அ. ஜனனி யா/ஜ. ச. சைவ. வித்தி.
3. ர. சாயிசரண்ஜா யா/உ. சை. த. வித்தி.
4. இ. சுஜிதா யா/இ.ம.ஆ. பாடசாலை
5. ம. விமல்ராஜ் யா/ இ. ஆ. பாடசாலை
6. யோ. பத்மயோகன்
7. த. பாலரூபன் யா/ கொ. இ. கல்லூரி
8. தி. பிரஷாந்த் யா/இ. ஆ. பாடசாலை
9. பா. கௌந்திகா யா/ இ. ஆ. பாடசலை
10. து. ஜயந்தன்
11. செ. சொபிசன் யா / கொ. இ. ஆ. பா.
12. அ. அலக்ஷன்

அடுத்த பரீட்சை:
19 - 04 - 1998

**BOND**
யாழ். நகர்
(54976)

**தேவை**

ஐஸ்பழ வியாபாரிகள் தேவை.
தொடர்பு முகவரி:
அருண் கிறீம் ஹவுஸ்
34, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3470)


யாழ். மாவட்ட

## வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்
## வருடாந்த பொதுக்கூட்டம்
## 1998

1998 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் 1998—04—18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு (புதிய நேரம்) யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் திரு. கே. சண்முகநாதன் - யாழ். அரச அதிபர் அவர்களின் முன்னிலையில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு யாழ். மாவட்ட சகல வர்த்தகர் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-

அழைப்பிதழ் இதுவரை கிடைக்காத வர்த்தகர் சங்கங்கள் யாவும் இவ் அறிவித்தலை அழைப்பாக ஏற்றுக் கொண்டு குறிப்பிட்ட நேரத்தில் சமுகமளித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி. நமசிவாயம்
தற்காலிக செயலாளர்,
யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்.

இல. 19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/3474)

# மரண அறிவித்தல்கள்

## முத்துக்குமாரு குணபூசணி

இருபாலையைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி முத்துக்குமாரு குணபூசணி அவர்கள் 15 — 04 — 1998 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. சீ. முத்துக்குமாரு அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் சண்முகம் அன்னலட்சுமி அவர்களின் அன்பு மகளும் திருமதி நி. பத்மாவதி ரவீந்திரன் (பாரிஸ்), திருமதி இ. புனிதவதி (பாரிஸ்) ஆகியோரின் தாயாரும், திரு. க. நித்தியராஜா (Former Factroy Manager Nisoc Factory Colombo), திரு. இராசேந்திரன் (பாரிஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும் மயூரன் (A/L 99, Kopay Christian College), நிர்த்திகா Kopay Christian College), செந்தூரன் (Kopay Christian College) ஆகியோரின் ஆசை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16 — 04 — 1998 வியாழக்கிழமை இருபாலை இந்து மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. நித்தியராஜா
(மருமகன்)

'' சந்திரோதயம் ''
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(54957)

## திருமதி ஆச்சிமுத்து பொன்னம்பலம்

'பொன்மனை' பொன்னாலையைச் சேர்ந்த திருமதி ஆச்சிமுத்து பொன்னம்பலம் 13-04-1998 அனறு காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், Dr. பாலகிருஷ்ணன் (U. K) திருமதி தவமணி — வரதராஜா, புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வரதராஜனின் மாமியாரும் ரவீந்திரன், ராகினி, ரவீஸ்வரி, ராஜ்குமார் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 14-04-98 செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புவனேஸ்வரி
(மகள்)

பொன்மனை,
பொன்னாலை.

(54985)

## ஞானச்சந்திரமூர்த்தி சிவாஜி

(ராஜன்)

பண்ணாகத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஞானச்சந்திரமூர்த்தி - கண்மணி அம்மாவின் அன்பு மகன் சிவாஜி 15 - 04 - 98 அன்று கனடாவில் காலமானார். இவர் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் சித்தியெய்திய Engineer ஆவார்.

அன்னார் Dr. பவானி சந்திரகுமார் (U.K.), சின்னையா (Engineer, U.S.A), மாலினி தேவகாந்தன் (கனடா), Dr. காந்திஜி (தெமட்டக்கொடை வைத்தியசாலை), பாமினி (கொழும்பு), வதனி (Medical Student, Russia) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரகுமார், தேவகாந்தன், சுகந்தினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. ஞானச்சந்திரமூர்த்தி

''முத்தகம்'',
பண்ணாகம்,
சுழிபுரம்.

(54976)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி மகா வித்தியாலய அதிபர்
# திரு. சிற்றம்பலம் துரைராசா அவர்களின்
# சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ்

## சலிப்பின்றி சேவை செய்யும் சீலர்

''வல்லிதின் சீலம் இனிதுடைய ஆசான்
ஞாலம் எனப்படுவார்'' — திரிகடுகம்

அறவழி நின்று ஒழுக்கம் பேணிச் சலிப்பின்றி உழைத்து ஒய்வு பெறும் நல்லாசிரியர் அன்பர் துரைராஜா அவர்கள். இன்று போல் என்றும் இளஞ் சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டியாக நிலவி நீடுழி நீடுழி வாழ வேண்டும் என நல்லன எல்லாம் தரும் அன்னையை இறைஞ்சுகின்றேன்.

சபாரத்ன ஈஸ்வரசர்மா
மூத்த சமய விரிவுரையாளர்.

## பொதுப் பணியாளர்

ஒய்வு என்பது அரச சேவைக்கு மட்டுமேபொருந்தும். பொதுப்பணிக்கு ஓய்வு இல்லை. திரு.சிற்றம்பலம் துரைராஜா அவர்கள் 38 ஆண்டு கால அரச சேவையில் இருந்து ஒய்வு பெறுகின்றார். எனினும் அவரது ஆற்றலும், கல்வி உலக அனுபவமும் இனி முழுமையாகச் சமூகத்திற்கு கிட்ட வேண்டும்.

இதற்கு ஏற்ற வகையில் அவர் அவரது ஒய்வு காலத்தை மேலும் சிறந்த பொதுப் பணிகளுக்கு ஆற்றுப்படுத்துவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அவரின் ஒய்வு காலம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு—
கிழக்கு மாகாணசபை, திருகோணமலை.

## முகாமைத்துவச் சிறப்பு மிக்கவர்

அதிபர் திரு. சி. துரைராசா அவர்கள் 38 ஆண்டு காலசேவையின் பின் ஓய்வு பெறுகிறார். அக்கராயன் போன்ற மிகக் கஷ்டமான பகுதிகளில் கடமையாற்றியதோடு அல்லாமல் அப்பகுதிகள் சிறப்புற கடினமாக வேலை செய்து அயராது உழைத்தவர்.

வரணி மகாவித்தியாலயத்திற்கு வந்த பின்னர் அந்த இடமும். காலமும் மிகுந்த கஷ்டத்திற்குட்பட்டிருந்த போதும் அவர் சலிப்படையாது தனது முகாமைத்துவச் சிறப்பினால் அப்பாடசாலையைச் சீருஞ் சிறப்பும் பெறச் செய்தார். அண்மையில் வலிகாமத்திலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த போது அதிபர் அவர்களும் பாடசாலையும், சமூகமும் ஆற்றியதொண்டு என்றும் நினைவு கூரத்தக்கது. அவருடைய ஆளுமையையும், ஆற்றலையும்,விடாமுயற்சியையும்பாராட்டி அவரின் வாழ்வு மேலும் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

கே. கந்தசாமி.
(மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடக்கு - கிழக்கு மாகாணசபை,
திருகோணமலை).

## அர்ப்பணிப்பு மிக்க அதிபர்

அதிபர் அவர்களை இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நான் அறிவேன். கற்பித்தல் நடவடிக்கையில் மட்டுமன்றி தான் சார்ந்த சமூகத்தின் தளத்தில் நின்று கொண்டு சமூக மேம்பாடுகளில் அரிய பல சமூக நலத்திட்டங்களை ஆக்குவதிலும், அமுலாக்குவதிலும் பங்கு கொண்டு உழைத்தவர்.

பூநகரிமகாவித்தியாலயத்தின் அதிபராக இருந்த காலத்தில் அக்கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளில் தன்னை அர்ப்பணித்துச்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊக்கம் மிக்கவர்

எமது கல்லூரியில் நீண்டகால ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. சி. துரைராசா அவர்கள் ஓய்வு பெறுவது காலத்தின் கட்டளை. எனினும் கல்வி உலகுக்கு இது ஒரு பேரிழப்பாகும். ஆங்கில ஆசிரியராக கடமையாற்றியதோடு விளையாட்டுத்துறை, சாரணியம் என்பவற்றுக்கும் பொறுப்பாக இருந்தார். ஆற்றலும், ஊக்கமும் தலைமைத்துவப் பண்பும் மிக்க இவர் சொல்லும், செயலும் இணையப்பெற்ற பண்பாளர். எந்நிலையிலும் தன் கருத்திலிருந்து வழுவாத

(4 ஆம் பக்கம் பார்க்க)



திரு. சிற்றம்பலம் துரைராசா
( S. L. P. S. Grade – 1 )

## மனித நேயம் மிக்க அதிபர்

அதிபர் திரு.சிற்றம்பலம் துரைராசா அவர்கள் பல பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி புகட்டி ஆங்கில மொழி விருத்திக்கு அயராது உழைத்தவர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 14 ஆண்டுகள் கடமை ஆற்றிய போது தமது கற்றல், கற்பித்தல் பணிகளில் மட்டுமன்றி பல்வேறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னேற்றத்துக்கு வழிவகுத்தவர்

அதிபர் திரு. சி. துரைராசா அவர்கள் 38 வருட காலம் கல்விப் பணியாற்றி ஓய்வு பெறுகிறார். இவர் ஒரு சிறந்த ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றி பலரின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்தவர். இவர் ஆசிரியர் பணியிலிருந்து படிப்படியாக கல்வி நிர்வாகப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்து 19 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இவரது காலத்தில் வரணி மகா வித்தியாலயம் கலை, வர்த்தகம் ஆகிய துறைகளில் நன்கு வளர்ச்சி பெற்றது. இங்கிருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வருடாவருடம் தெரிவாகின்றனர். பல்கலைக்கழகத்தில் வரணி ம. வி மாணவர்கள் கல்வியில் சிறப்பாகத் திகழ்வதற்கு இவரது பங்களிப்புத் தான் முக்கியமெனக் கருதுவதுண்டு.

1995 இல் இடம் பெயர்ந்த போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தை வரணி ம. வியில் தற்காலிகமாக இயங்க வைக்க விரும்பி இவருடன் தொடர்பு கொண்டிருந்தேன். குடாநாட்டில் எதிர்காலத்தில் அமையவுள்ள இரண்டாவது பல்கலைக்கழகம் வரணியில் அமைய வேண்டும். அதனால் குடாநாட்டின் கிழக்குப் பிராந்தியம் பெரும் பயன் பெறும்.

வரணி மகா வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய திரு. துரைராசா அவர்கள் கல்வி, சமூகப் பணிகளில் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். அவரது சேவை வரணி மக்களுக்கு தொடர்ந்தும் கிட்டவேண்டும்.

கடவுள் அவருக்கு நல்ல தேகசுகத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்க வேண்டும்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணை வேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.

மலர் வெளியிடுவோர்:
ஆசிரியர்கள்,மாணவர்கள்,பழைய மாணவர்சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

## சமயக் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்த அதிபர்

'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்ற முதுமொழி ஆசிரியப் பணியில் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுகிறது, இப்பணியில் 38 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகப் பணியாற்றிய அதிபர் திரு. சிற்றம்பலம் துரைராசா அவர்கள் தமது சேவைக் காலத்தில் கிறிஸ்தவ பாட ஆசிரியர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் தானே அப்பாடத்தைக் கற்று, கற்பித்து மதிப்பீடுகளை மேற்கொண்ட பெருமைக்குரியவர். இத்தகைய இவரின் சேவையை எமது சமூகம் நன்றி கூறிப் பாராட்டுவது முறையே.

ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வுபெற்றாலும் சூழலில் வாழ்வோருக்கு அவர் நல்லாசானாகத் தொடர்ந்து பணி செய்யவும் வாழ்வில் நிறைவும், மகிழ்வும் காணவும் இறை ஆசீர் இறைஞ்சி அவரை வாழ்த்துகின்றேன்.

அருட்திரு. கலாநிதி அன்ரன் மத்தாயஸ்
தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளரும்,
கிறிஸ்தவ, இஸ்லாமியத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

## எடுத்துக் காட்டான அதிபர்

திரு. சி. துரைராசா அவர்கள் அதிபர் என்ற பதவிக்கு எடுத்துக்காட்டாக வாழ்பவர். சிந்தை, சொல். செயல் யாவற்றிலும் புதியவற்றை இப்பகுதிக்குச்செய்ய வேண்டும் என்ற துடிப்பும் உறுதியும் உடையவர். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமல்ல சமூகத்திற்கு இடையேயும் தொடர்புகளை உருவாக்கியுள்ளார். கல்விச் சமூகத்திற்கப்பால் சமய, சமூக விழாக்களிலும் தலைமைகள் ஏற்று சிறப்புறச் செயலாற்றுவதும் பாராட்டிற்குரியன. தொடர்ந்தும் அவரின் வாழ்வும் பணிகளும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

அருட்திரு. ச. இ. ஆனந்தராஜன்
தென்இந்திய திருச்சபை யாழ், பேராயம்,
வரணி.

## முன்னிலையில் திகழச் செய்தவர்

திரு. சிற்றம்பலம் துரைராசா அவர்கள் வரணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வரணி மகாவித்தியாலயத்திலேயே 11 வருடங்கள் முதலாம் தர அதிபராகக் கடமையாற்றும் பெறுபேறு பெற்றவர். தமது சொந்த மண்ணின் சிறார்களின் கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்தவர். தமது சேவைக் காலமாகிய 38 வருடங்களில் 19 வருடம் அதிபராக இருந்தவர். மிகச் சிறந்த ஆளுமை உடையவர். இதனால் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் மற்றைய பாடசாலைகள் பாதிக்கப்பட்டு பின்னடைவுகளைச் சந்தித்த போதும் வரணி மகாவித்தியாலயத்தை கட்டிக் காத்து முன்னிலையில் திகழச் செய்தவர்.

இவர் 16-04-98 இல் ஓய்வு பெறுவது பாடசாலையின் வளர்ச்சியில் தேக்கத்தை ஏற்படுத்துமாயினும், இவரது ஆளுமையின் கீழ் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றமையினால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறந்த சமூக சேவையாளர்

ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக போற்றக்கூடிய விதத்தில் கடமையாற்றிய திரு. சி. துரைராசா அவர்கள் சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்ந்தார். இடைக்குறிச்சிக் கிராமத்தின் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராக, வரணிக் கலாமன்றத்தின் தலைவராக, கொடிகாமம் ப. நோ. கூ. ச நெறியாளர் குழு உறுப்பினராக இருந்து அவர் ஆற்றிய சேவைகளை நானறிவேன்.

அவர் மேன்மேலும் இப் பொதுப் பணிகளில் சிறப்புற ஈடுபடவும், சிறந்த உடல் நலத்தோடு நீண்டகாலம் வாழவும், இவரின் குடும்பம் சிறப்புறவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருள் புரிவாராக.

பு. சுந்தரம்பிள்ளை.
பிரதேச செயலர், தென்மராட்சி.

19-09-1998 ஞாயிறு காலை 9.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் சேவை நலன் பாராட்டு விழாவிற்கு ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விசேட வாழ்த்துரை வழங்குவோர்:
கலாநிதி க. குணராஜா அவர்கள், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. சிற்றம்பலம் துரைராசா அவர்களின் சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ்

(மூன்றாம் பக்கத் தொடர்)

## பெற்றோரின் மதிப்பைப் பெற்றவர்

அதிபர் திரு. சி. துரைராசா அவர்கள் தமது ஆளுமையினால், ஆற்றலினால், அயரா உழைப்பினால் பெற்றோரின் மனதைப் பெரிதும் கவர்ந்துள்ளார்கள். 10 ஏக்கருக்கு மேற்பட்ட பாடசாலை வளவிற்குள் நின்ற பெரும் பற்றைக் காட்டை அதிபரின் வேண்டுகோளிற் கிணங்க 300 இற்கும் மேற்பட்ட பெற்றோர்கள் 9 நாள்கள் சிரமதான வேலை செய்து வெட்டி அழித்தார்கள் என்றால் பெற்றோர்கள் இவர் மீது வைத்திருக்கும் மதிப்பிற்கு வேறு அளவீடுதான் வேண்டுமா? மேலும் அதிபர் அவர்கள் சொந்தச் செலவில் இப்பற்றை வேர்களைப் புரட்டிவித்தமை நினைவு கூரக்கூடிய தொன்றாகும்.

அன்னாரின் சிறந்த வாழ்விற்கு எமது பிரார்த்தனைகள்.

வீ. சிவராசசிங்கம்
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சபை)

## சாதனை படைத்தவர்

எமது அதிபர் சி. துரைராசா அவர்கள் ஆசிரியர்களின் ஆற்றலையும், அறிவையும் இனங்கண்டு ஏற்ற முறையில் வேலை வாங்குவதில் நிகரற்றவர். பரிவோடும், அன்போடும் ஆசிரியர்களோடு பழகி அவர்களின் மதிப்பைப் பெற்று ஆசிரிய ஒற்றுமையை வளர்த்து சிறப்புறச் சேவையாற்றியுள்ளார். அவர் இவ் வித்தியாலயத்தில் ஆற்றிய சாதனை என்றும் நினைவுகூர வேண்டிய தாகும். அவரும் குடும்பமும் மேலும் பல வகையிலும் சிறப்புற சுட்டிபுரம் அம்பாளின் அருளைப் பிரார்த்திக்கிறோம்.

திருமதி ப. ஆனந்தசிவம்
துணை அதிபர், வரணி ம. வி.

## சிறந்த வழிகாட்டி

எங்கள் அதிபர் அவர்கள் வரணி ம.வியின் கல்வி, ஆளணி, வள அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஆற்றிய சாதனைகள் மிகவும் உன்னதமானவை. இதன் வெற்றியே இங்கு 50 வரையான பட்டதாரிகள் உருவாகவும், சிறந்த மைதானம், பலலட்சம் பெறுமதியான மணிமண்டபம் போன்றவை அமையவும் காரணமானது. இங்கு கற்று வெளியேறிய மாணவர்கள் பலர் உயர்ந்த தகைமையும், சிறந்த ஆளுமையுடையவர்களாகவும் துலங்குவதற்கு இவரின் வழிகாட்டலே மூலகாரணமாக உள்ளது. இவரின் பணிகளைப் போற்றிப் பாராட்டுவதில்பெருமிதமடைகின்றோம்.

சி. உதயக்குமார்
(உப. தலைவர், பழைய மாணவர் சங்கம். வரணி ம. வி.)

**முன்னிலையில்..,**
இவரின் பேரைச் சொல்லக் கூடியதாக பாடசாலையை வளர்த்துச் செல்வர்கள் என்னும் நம்பிக்கை உண்டு.

இக் கல்விமான்—அவரது குடும்பத்தினர் இவர் செய்த நற் கல்விச் சேவையின் பயனைப் பெறுவதுடன் இவரின் எதிர்காலம் நல்லபடியாக சிறப்பாக அமைவதற்காக எனது பிரார்த்தனைகளும், நல்லாசிகளும் இவர்களுக்குக் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க. சண்முகநாதன்
அரச அதிபர், யாழ். மாவட்டம்.

**ஊக்கம்...**
மன உறுதி படைத்தவர், நல்லனவற்றை வரவேற்று அல்லாதனவற்றைத் தட்டிக்கேட்கும் தற்துணிவு கொண்டவர். எங்கும் எதிலும் நுழைந்து தன் பணிகளை வெற்றிகரமாகச் சாதிக்கமுயலும் செயற்றிறன் மிக்கவர்.

யா/வரணி மகாவித்தியாலய அதிபராகப் பல ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெறும் திரு. சி. துரைராசா அவர்களின் ஓய்வுகாலம் அமைதியும் ஆரோக்கியமும் நிறைந்து வளமாக அமைய வாழ்த்துகின்றேன்.

க. சந்திரசேகரா
(சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபரும், வடமாகாண ஆசிரிய சங்கத்தலைவரும்)

**அர்ப்பணிப்பு...**
செயலாற்றி மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியதை யான் இன்றும் நினைவு கூருகின்றேன்.

இவர் ஆசிரியர் சேவையில் இருந்து இளைப்பாறினாலும், இவரது உள்ளமும் உடலும் இளைப்பாறாது, தொடர்ந்து துன்ப துயரத்தினைச்சுமந்து வாடும் எமது மக்களுக்குச் சேவையாற்றுவார் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

இவரது தனிப்பட்ட வாழ்வும், சமூக வாழ்வும் சிறக்க எல்லாம் வல்ல உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரனை வேண்டுகின்றேன்.

தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.

## கடமையுணர்வு மிக்கவர்

எமது அதிபர் திரு. சி. துரைராசா அவர்கள் நேர்மையான உள்ளமும், கடமையுணர்வும், தெய்வ பக்தியும் மிக்கவர். அவர் அன்பால், இனிய சொல்லால், ஆழ்ந்த ஆளுமையால் சகலரையும் கவர்ந்தவர். அவர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், ஆசிரியரின் ஒற்றுமையான சேவைக்கும், மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்கும் அயராது பாடுபட்டு தென்மராட்சியில் எமது பாடசாலையின் புகழோங்க வைத்தவர். அவரின்கடமையுணர்வுக்கு அவரே நிகர். அவர்களும் அவர் தம் குடும்பத்தினரும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

க. ஜெயவீரசிங்கம்
(ஆசிரியர் கழகம். வரணி ம. வி.)

## ஓய்வு பெறுவதால் பேரிழப்பு

எங்கள் பெருமதிப்புக்குரிய சிற்றம்பலம் துரைராசா அவர்கள் எமது வித்தியாலயத்தில் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக கல்வியிலும் அதனோடு இணைந்த பல்வேறு துறைகளிலும் அளப்பரிய சேவைகள் ஆற்றி இன்று ஓய்வு பெறுவது எமக்கெல்லாம் பேரிழப்பே. ஆயினும் இவருடைய சேவைக்காலப் பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக பட்டதாரிகள் ஆகிக் கொண்டிருப்பதும், பலர் அரசாங்க உத்தியோகத்தராக நியமனம் பெற்றிருப்பதும் மிகவும் மகிழ்ச்சி தரும் நிலையாகும். இவ்வாறாக மாணவர் சமுதாயத்தை வளம்படுத்திய எமதுஅதிபரைபாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் உயர்தரமாணவர்மன்றம் சார்பாக பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

உயர்தர மாணவர் மன்றம் 1998, 1999
(யா/ வரணி மகா வித்தியாலயம்.)

## தனிப்பெருந் தலைவர்

வரணி மகாவித்தியாலயத்தின் பொலிவுக்கும் புகழுக்கும் நிலைக்களனாக நிலைத்திருக்கும் அதிபர் திரு. சி. துரைராசாஅவர்கள் தென்மராட்சி அதிபர்கள் சங்கத் தலைவராகத் திகழ்ந்து தனக்கெனத் தனியான ஸ்தானத்தைத் தட்டிக்கொண்டவர். ஒரு முறையல்ல இரு முறைகள் தென்மராட்சி அதிபர்கள் சமூகம் அவரை அதிபர்கள் தலைவராக்கி நிறைவு கண்டதென்றால் அவரது உயர் தலைமைத்துவப் பண்பினை விளக்கிட வேறு சான்றுகள்வேண்டுமோ? அன்னாரின் ஓய்வு வரணி ம. விக்கு மட்டுமல்ல அதிபர்கள் சங்கத்திற்குமே ஒரு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டதாகின்றது.

'உள்ளதை உள்ளவாறே உரைத்திடும்
உறுதி உள்ளோர்
பிள்ளைதன் உள்ளம் பெற்றே
பெருமையாய்ப் பேசும் பேச்சாளர்
வெள்ளைதன் குணத்தினோடு விழுமிய
வினைகளாற்றி
மெல்லநல் லோய்வு கொள்வோன்
மேன்மைகள் மிளிர வாழ்க!'

மு. பாலசுப்பிரமணியம்
(செயலாளர், தென்மராட்சி அதிபர்கள் சங்கம்.)

**மனித நேயம்...**
துறைகளிலும் தமது முத்திரையைப் பதித்துள்ளார். விளையாட்டுப் பொறுப்பாசிரியராக இருந்து இவர் பயிற்சி கொடுத்த உதைபந்தாட்டக் குழுக்கள் J.S.S.A போட்டியில் வெற்றிக் குழுக்களாக வந்தமை பாராட்டுற்குரியது.

இவர் அதிபராக கல்விச் சமூகத்திற்கு வழங்கிய சேவை அளப்பரியது. இவரது காலத்தில் வரணி மகா வித்தியாலயத்தில் இருந்து அதிகமானோர் பல்கலைக்கழகம் புகுந்துள்ளனர். அவர்களில் பலர் இன்று கல்வித் துறையிலும் ஏனைய திணைக்களங்களிலும் சேவை ஆற்றி புகழ் பூத்துவிளங்குகின்றனர்.

வரணி மகாவித்தியாலயத்தின் அகக் கட்டமைப்புக்களிலும் பல அபிவிருத்திகள் இவர் காலத்தில், இவரது அயராத முயற்சியினால் தான் ஏற்பட்டன. ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் மற்றும் சமூகத்துடனும் மனித நேயத்துடன் இடைத் தொடர்பு வைத்தே இவர் இத்தகைய சாதனைகளைப் புரியக் கூடியதாக இருந்தது.

கண்ட மாத்திரத்தில் எவருடனும் அன்புடன் அணுகி தனது மனித நேயஇடைத் தொடர்பால் எவரையும் ஆட் கொள்ளும் ஆளுமை மிகுந்தவர் திரு. சி. துரைராசா அவர்கள். தென்மராட்சியின் கல்விச் சமூகம் என்றும் நன்றியுடன் அவர் சேவகைளை நினைவில் வைத்திருக்கும்.

ஓய்வு பெறும் அதிபர் திரு. துரைராசா அவர்கள் தமது கிராமத்திற்கும் சமூகத்திற்கும் வழி காட்டியாக இருந்து சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு பூரண சுகத்தையும், தளர்வறியா ஊக்கத்தையும் வழங்க வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

இலங்கையர் கணேசன்
கோட்டக்கல்வி அதிகாரி,
சாவகச்சேரி கல்விக்கோட்டம்.

# அறவழிப்போராட்டக்குழு

நடத்தும்

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி - 1998

நாள்: 18 – 04 – 98/19 – 04 – 98
நேரம்: காலை 9. 00 மணி
இடம்: அறவழி செயலகம்
கைதடி, நுணாவில்.

தலைவர்:
திரு. வீ. ஜீ. தங்கவேல் (தலைவர்-அறவழி)

பிரதம விருந்தினர்:
திரு. இலங்கையர் கணேசன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர்-தென்மராட்சி)

முன்பள்ளி ஆசிரியர்களைச் சமுகந் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

எம். கே. ஜீவகதாஸ்
கௌரவ செயலாளர்

NVDAG (54970)

## 2 ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம்: 05-05-1922 மறைவு: 17-04-1996

அமரத்துவமெய்திய
கோப்பாய்
கவியரசு வெண்பாமணி

### திரு. முருகசூரியன்

[ ஓய்வு பெற்ற அதிபர் ]

நல்லைக்கந்தனுக்கு சூடிய
உங்கள் பாமாலைகள்
ஆத்ம சாந்திக்கு உதவுவதாக!
ஓம் சாந்தி!

உங்கள் நினைவுக்குரிய
குடும்ப உறவினர்கள்

M. K. இளையப்பு ( J. P. ),
குமரகிரி, கோப்பாய். (54969)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்: 1919 — 09 — 19



மறைவு: 1998 — 03 — 19

### பண்டிதர் சி. வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)
போக்காலை வீதி, உடுப்பிட்டி.

பண்டிதர் சி. வேலுப்பிள்ளை அவர்கள் அமரத்துவம் எய்திய 31 ஆம் நாள் நினைவாக போக்காலை வீதி உடுப்பிட்டியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 1998–04-19 ஞாயிறு மு. ப. 11.00 மணிக்கு நடைபெற இருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் பண்டிதர் சி. வேலுப்பிள்ளை அவர்கள் தவமணியின் கணவரும், தவேஸ்வரன் (கல்விஅமைச்சு திருகோணமலை), இராஜகுலலேஸ்வரி, விமலேஸ்வரி, ஜெகதீஸ்வரி, தனேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற வர்த்தகர் தங்கேஸ்வரன் ஆகியோரின் தந்தையும், விநாயகசோதி(குறளமுதம்), சந்திரராஜா (பொறியியலாளர், கட்டார்), சந்திரவதனா, சரோஜினிதேவி, கலாநிதி இராஜகுமாரி ஆகியோரின் மாமனாரும், குகன், குகப்பிரியா, செல்வக்குமரன், கௌரிப்பிரியதர்சினி, ஷர்மிளா, நிர்மிளா, தர்ஷன், மேனகா, வனிதா, சயந்தன், தனுஷாந்தன், விஷ்ணுப்பிரியா, நிவேக், கேசியா, அஜந் ஆகியோரின் பேரனுமாவார்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்து, ஆறுதல் கூறியவர்களுக்கும், பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

- குடும்பத்தினர்

போக்காலை வீதி,
உடுப்பிட்டி. (54793)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் சீனி, அரிசி போதியளவு கையிருப்பில்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். மாவட்டத்தில் தற்போது போதியளவு சீனி கையிருப்பில் இருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்ட மக்களின் பாவனைக்கு ஒரு மாதம் 810 மெற்றிக்தொன் சீனி தேவைப்படுகிறது. தற்பொழுது 'மாஹோ' கப்பல் மூலம் ஆயிரத்து 850 மெற்றிக்தொன் சீனி எடுத்து வரப்பட்டுள்ளதால் போதியளவு சீனி கையிருப்பில் உள்ளது.

இதனை விட 'குமண' கப்பலில் 700 மெற்றிக்தொன் சீனியும், ஆயிரத்து 550 மெற்றிக்தொன் அரிசியும், 350 மெற்றிக் தொன் பருப்பும் எடுத்து வரப்படவுள்ளன.

'குமண' கப்பலில் எடுத்து வரப்படும் பொருள்கள் வந்து சேர்ந்த பின்னர் மூன்று மாதத்துக்குத் தேவையான சீனியும், இரண்டரை மாதத்துக்குத் தேவையான அரிசியும் கையிருப்பில் இருக்கும் என்று யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதியளவு சீனி தற்பொழுது கையிருப்பில் இருப்பதால் யாழ். மாவட்டத்தில் தாராளமாக சீனி விநியோகம் நடைபெறும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

[ஐ-5-ரீ]

## மாகாணசபைத் தேர்தலில் சிறிமானி கட்சி ஐ.தே.கவில்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித்) ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவி சிறிமானி அத்துலத்முதலியுடன் தொடர்பு கொண்டபோது, "பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் எமது முன்னணி அங்கம் வகித்தாலும் மாற்றாந் தாய் மனப்பான்மையுடன்தான் நடத்தப்படுகிறது. சமுர்த்தி நியமனங்களில் கூட திட்டமிடப்பட்டவாறு புறக்கணிப்புகள் இடம்பெற்றுள்ளன. ஐ. தே. க. வுடன் எமது முன்னணி இணையவேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்படுமானால் அதற்கு சமுர்த்தி நியமனமும் ஒரு காரணம் ஆகும்'' என்றார்.

இம்முடிவு தமது தனிப்பட்ட முடிவாக இராது என்றும் முன்னணியின் சக உறுப்பினர்களின் கருத்துக்களின் அடிப்படையில்தான் முடிவு எடுக்கப்படும் என்றும் சிறிமானி மேலும் தெரிவித்தார்.

(இ-21)

## 61 ஆவது புள்ளி உலர் உணவு

அரியாலை, ஏப். 17

இடம்பெயர்ந்தவர்களுக்கான 61 ஆவது உலர்உணவு முத்திரைகளுக்கு உணவுப் பொருள்களை வழங்குவதற்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அரிசி, சீனி, மைசூர்ப் பருப்பு, பால்மா என்பன வழங்கப்படவுள்ளன.

இதேவேளை 60 ஆவது உலர் உணவு முத்திரையின் புள்ளிக்கு யாழ். பிரதேச செயலர் பிரிவில் உணவுப் பொருள்களை விநியோகிக்கும் வேலைகள் கடந்த சனிக்கிழமையுடன் முடிவடைந்துள்ளதாக யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)

## கணனி வந்தது

கொழும்புத்துறை, ஏப். 17

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு கணனி ஒன்று கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

(ஐ-30)

## குழந்தைகள் அபிவிருத்தி ஒன்றுகூடல்

வலி. தென் மேற்கு, ஏப். 17

சுகவாழ்வு நிலையத்தினரால் குழந்தைகளின் அபிவிருத்தி -வளர்ச்சி பற்றிய ஒன்று கூடல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலைய மண்டபத்தில் நடத்தப்பட்டது.

உளவளத் துணையாளர்கள், ஓவியர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பயிற்றுவிக்கப்பட்ட குழந்தைகளின் வளர்ச்சிப்படி நிலைகள் அவர்களது பேச்சு, கவிதைகள், நடனங்கள், ஓவியங்கள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டன.

ஒன்று கூடல் நிகழ்வின் இறுதியில் பரிசில் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

(ஐ-185)

## கூரையில் முட்டும் உயரத்துக்கு தபாற் பொதிகள் தேக்கம்!

யாழ்ப்பாணம், ஏப். 1

தபால் ஊழியர் தொழிற் சங்கங்களின் போராட்டத்தால் தபால் பரிவர்த்தனை நிலையத்தின் 15 அறைகளிலும் கூரையில் முட்டும் உயரத்துக்கு தபாற் பொதிகள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

18 கோரிக்கைகளை முன் வைத்து ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலை நிறுத்தப்போராட்டம் தற்சமயம் 5 கோரிக்கைகளை முன்வைத்தே நடத்தப்படுவதாக தொழிற்சங்கப் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

வெளிநாடுகளில் இருந்து வந்த டிராப்புக்கள், வடக்கு-கிழக்கில் இருந்து படையினர் தமது உறவினர்களுக்கு அனுப்பிய மணியோடர்கள் போன்றவையும் தேங்கிக்கிடக்கும் தபாற் பொதிகளில் அடங்கும்.

(ஐ-3)

## படைத் தலைமையகம் மீது செட்டிகுளத்தில் ஷெல் வீச்சு!

வவுனியா செட்டிகுளம் இராணுவ பாதுகாப்பு தலைமையகம் மீது விடுதலைப்புலிகள் கடந்த புத்தாண்டு தினத்தன்று இரவு பரவலாக மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக படைத் தலைமையகத்துக்கு சிறிது சேதம் ஏற்பட்டதாகத் தெரியவந்தது.

அதேநேரம் — வன்னியில் தாக்குதல் ஒன்றை நடத்தும் நோக்குடன் மதவாச்சி — மன்னார் வீதியைக் கடந்து 200 இற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதாகப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

வவுனியா தொலைத்தொடர்பு சேவையில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக கடந்த இரு தினங்களாக வெளிமாவட்டங்களுக்கான தொலைத்தொடர்பு பாதிக்கப்பட்டுள்ளது.

(ஐ-21-3)

## வாதரவத்தைச் சம்பவம்: 15 சிப்பாய்கள் நீதிமன்றில் ஆஜர்

கடந்த நவம்பர் மாதம் அச்சுவேலி வாதரவத்தையில் இரு இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகசந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த 16 இராணுத்தினரில் 15 பேர் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இக்கொலைக்குற்றச் சாட்டில் சம்பந்தப்பட்ட 13ஆவது சந்தேக நபர் சுகயீனம் காரணமாக நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படவில்லை. அவரது மருத்துவ அறிக்கை நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நீதிமன்றம் விடுமுறையாக இருந்த காரணத்தினால் சந்தேக நபர்களை தனிப்பட்ட அறையில் வைத்து யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு தனித்தும், ஒருமித்தும் விசாரணைகளை நடத்தினார்.

இந்த விசாரணையின் போது தாங்கள் இந்தக் கொலைகளில் ஈடுபடவில்லை என்றும், படையினரின் கெடுபிடிகள், மற்றும் தாம் நடத்தப்பட்ட விதம் குறித்தும் தம்மிடம் வாக்கு மூலம் பெறப்பட்ட முறை குறித்தும் சில தகவல்களை நீதிமன்றுக்குத் தெரிவிக்கப் போவதாகவும் நீதிவானிடம் தெரிவித்தனர்.

குற்றவியல் சட்டத்தின்படி ஒருவர் வாக்கு மூலம் கொடுப்பதாக இருந்தால் அது அவரது சுய விருப்பத்தின்படி கொடுக்கவேண்டும். வாக்கு மூலம் கொடுப்பதற்கு முன்னரும், கொடுத்த பின்னரும் சந்தேக நபர்களைப் படையினரிடம் ஒப்படைப்பதற்கு சட்டத்தில் இடமில்லை.

இன்றைய நிலையில் சந்தேக நபர்கள் மீண்டும் படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவிருப்பதால் இதனை ஒரு சுதந்திரமான வாக்கு மூலமாக நீதிமன்றினால் கருதமுடியவில்லை. ஆகையினால் உடனடியாக இவர்களது வாக்கு மூலத்தை சட்ட ரீதியாக என்னால் பதிய முடியவில்லை என்று நீதிவான் தெரிவித்தார்.

இது தொடர்பாக சட்டமா அதிபரின் கருத்தைக் கேட்டறிந்தபின்பே உரிய உத்தரவைப் பிறப்பிக்க முடியும் என்று கூறி இம்மாதம் 24 ஆம் திகதிவரை வழக்கை ஒத்திவைத்து சந்தேக நபர்களைத் தனி ஓர் இடத்தில் தடுத்துவைக்கும்படி படையினருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ-5-ரீ)

## சண்டிலிப்பாய்ப் பிரிவில் விண்ணப்பித்த பலருக்கு உதவிப்பணம் கிடைக்கவில்லை

வலி. தென்மேற்கு ஏப். 17

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர்கள் ஊடாக விண்ணப்பித்த பலருக்கு இன்னும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் கிடைக்கவில்லையெனத் தெரியவருகிறது.

தினமும் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் பிரதேச செயலர் பிரிவின் சமூக சேவைகள் பகுதிக்குச்சென்று ஏமாற்றத்துடன் திரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த காலங்களில் உதவிப்பணமாக வழங்கப்பட்ட 120ரூபா தற்போது குறைக்கப்பட்டு 100 ரூபாவாக வழங்கப்படுகிறது. இது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் பிரதேச செயலருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஐ-185)

## தோப்பூரில் சிப்பாய் பலி

திருகோணமலை, ஏப்.17

புத்தாண்டு தினத்தன்று இரவு 8.30 மணியளவில் மூதூர் தோப்பூர்ப் பகுதியில் படையினர் சென்ற வாகனம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

அன்றிரவு 9 மணியளவில் மூதூர் வண்ணாச்சேனைப் பகுதியில் வீட்டில் இருந்த பஸிர் (27 வயது) என்னும் இளைஞர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது மனைவி வெளிநாட்டில் இருப்பதாகத் தெரிய வந்தது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து மூதூரில் நேற்று முன்தினம் சில கடைகள் மூடப்பட்டிருந்தன.

(ஐ-8-2 -3)

## பருத்தித்துறைக்கு புதிய மரக்கறிச் சந்தை

பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்திற்கு அண்மையில் புதிய மரக்கறிச்சந்தை அமைக்கப்படவுள்ளது. தற்போது மீன்சந்தை பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ளது. ஆனால் மரக்கறிச் சந்தை மருதடியில் உள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என நகரசபைத் தலைவருக்கு சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து புதிய மரக்கறிச் சந்தையை பஸ் நிலையத்துக்கு அண்மையில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை—

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் மூன்று புதிய மலசல கூடங்களும் அமைக்கப்படவுள்ளன.

பருத்தித்துறை மீன் சந்தைக் கட்டடம் நீண்டகாலமாக மலசலகூட வசதி இன்றிக் காணப்பட்டது. இதனால் ஆண்களும் பெண்களும் மிகவும் சிரமப்பட்டனர். இதனைச் சுட்டிக் காட்டியதை அடுத்து இரு ஆண்களுக்கான மலசல கூடமும்; பெண்களுக்கான ஒரு மலசலகூடமும் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக நகரசபைத் தலைவர் வ. [illegible] ரத்தினம் தெரிவித்துள்ளார்.

(ஐ-118)

## செம்மணி, இருபாலைப் பகுதியில் உப்பு உற்பத்தி செய்ய முயற்சி

நீர்வேலி, ஏப். 17

செம்மணி, இருபாலைப் பகுதிகளில் உப்பு உற்பத்தியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

செம்மணி,இருபாலைப்பகுதிகளில் ஒவ்வோர் ஆண்டும் உப்பு உற்பத்திக் காலங்களில் அதிகளவு உப்பு உற்பத்தியாவது வழக்கம். ஆனையிறவுப் பகுதிகளில் உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுவது தடைப்பட்டுள்ளதால் செம்மணி, இருபாலைப் பகுதிகளில் அதிகளவில் உற்பத்தியை [illegible] நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நீர்வேலி வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், கூட்டுறவு உதவி ஆணையாளரினதும் கோப்பாய் பிரதேச செயலரினதும் அனுமதியுடன் மேற்படி இரு இடங்களிலும் நீரைத் தேக்கிவைக்கக்கூடியவாறு பாத்திகளை அமைத்து உப்பு உற்பத்தியை மேற்கொள்ளவுள்ளது.

(ஐ-9-110)

## எழுதுநர்கள் இல்லாது நீதிமன்றப்பணி பாதிப்பு

வடமராட்சி, ஏப். 17

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்றங்களில் எழுதுவினைஞர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிப்படைவதுடன் பொதுமக்களும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இந் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

(ஐ-173)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கைச்சங்கிலி ஒன்று உடுவிலுக்கும், மருதனார்மடத்துக்கும் இடையில் கடந்த புதன்கிழமை (15-04-98) மாலை 5—6 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்துகதிர் ஸ்ரோர்ஸ், மானிப்பாய் றோட், மருதனார்மடம், யாழ்ப்பாணம். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்) என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (54966)

கஜன் ஜெயகௌரி (ஊரெழு மேற்கு, சுன்னாகம்) என்பவரது விசேட அடையாள அட்டை ஆரியகுளம் சந்திக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்- உழவர் களஞ்சியம், பலாலிவீதி, திருநெல்வேலி. (54965)

தவக்குமார் ஞானேஸ்வரி ஆகியவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் 695634773V யும் இராணுவ அனுமதிப்பத்திரம் என்பனவும் நாவற்குழிக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ரஞ்சனாஸ் புடைவையகம், இல. 8, நவீனசந்தை, சாவகச்சேரி அல்லது திரு. கனகசபாபதி, மட்டுவில் கிழக்கு என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். [54945]

நடாராஜா சனுஜா என்பவரது (பெரிய பளை, பளை) 785272960V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை என்பன திருநெல்வேலிச்சந்தைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். இல. 8/6, பெருமாள்கோயில், யாழ்ப்பாணம். [54935]

### விற்பனைக்கு

பெரியசாப்பாட்டு மேசை, பலகைக்கட்டில்கள், சோபா கட்டில், Typistdesk. CupBoard, கிடாரம், கல்லுரல் உட்பட பல வீட்டுப்பாவனைப் பொருள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பழைய இலக்கம் 152, நாவலர்வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (வண்ணை நாவலர் பாடசாலைக்கு கிட்ட) (54964)

### தெளிவாகப் பார்க்க

ரி.வி. நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு புதிய அன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவதற்கும் பூஸ்ரர்களை பழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் B. Sc. Ceylon Dip. In Electronic Engineering London— 284, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரை முன்பாக), யாழ்ப்பாணம். (சி/3295)

### திருமணசேவை

அரசாங்க சேவையில் பத்து வருடமாக நிரந்தர சேவையில் சிற்றூழியராக வேலை செய்யும் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவருக்கு தகுந்த மணமகள் தேவை. செவ்வாய், ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் சந்திக்கவும்: (மாங்கல்யா) கு. திருவிளங்கம், 16/16, வளன்புரம் கொழும்புத்துறை, [54928]

### இலகு திருமண சேவை

கனடாவில் Business Management கற்று தொழில்புரியும் 24 வயது மணப்பெண்ணுக்கு பட்டதாரிக்கு நிகரான மணமகன் தேவை. Sponser சீதனம் உண்டு. மணமக்கள் தேர்வுக்கு ஞாயிறுகளில் ''துரைவிமலா'' 958/8, K. K. S. வீதி, யாழ். நாச்சிமார், கோயிலடி. (54958)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் எழுத, வாசிக்க கதைக்கப் பயிற்சி (புதிய பிரிவு காலை 10 மணிக்கு, 10மாணவர்கள் மட்டும் அனுமதி) ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (54962)

### கோழி மருந்து

19-4-98 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கம்புரோ மருந்து வழங்கப்படும். எம்மிடம் புரோயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் எடுத்தவர்கள் உடன் வந்து மருந்தைப்பெற்றுக் கொள்ளவும் ''மல்லிகாபதி'' சந்தை முன்ஒழுங்கை, மானிப்பாய். (54959)

### சேவல் குஞ்சுகள்

பிறிமா பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு மற்றும் 2 மாதம் வளர்ச்சியடைந்த பிறிமா, கைலைன் பிறவுண் வெள்ளை பேட்டுக்குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை முன்ஒழுங்கை, மானிப்பாய். (54960)

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கு

சமுர்த்தி உத்தியோகஸ்தர்களாக நியமனம் பெற்றவர்கள் பிரதேச செயலகத்தில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் நடைபெறும் பிரிவுக் கூட்டத்தில் சமுகமளிக்க வேண்டுமென யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் தமது கிராமங்களின் அபிவிருத்தி பற்றிய குறைநிறைகளை பிரதேச செயலரின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-185)


## யா/ ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
புத்தூர்
பழைய மாணவர் சங்கம்
**பொதுக்கூட்டம்-1998**

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 - 04 - 98 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு
அதிபர் திரு. வ. ஆறுமுகம்
அவர்கள் தலைமையில்
கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.
அனைத்துப் பழைய மாணவர்களும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தலைவர். செயலாளர்.

[54938]


# பொது எழுதுநர் சேவைப் பரீட்சை
# யாழ். மாவட்டத்தில் 26 பேர் சித்தி

நவாலி, ஏப். 17

அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் சிறுபணி செய்பவர்களை பொது எழுதுநர் சேவை வகுப்பு இரண்டு ''ஆ'' பிரிவிற்கும், தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு இரண்டு ''ஆ'' பிரிவிற்கும் நியமனம் செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் யாழ். மாவட்டத்தில் 26 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் 24 பேர் எழுதுநர் சேவையிலும், இருவர் தட்டெழுத்தாளர் சேவையிலும் சித்தியெய்தியுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 24 ஆம் திகதி முற்பகல் 9 மணி முதல் யாழ். செயலகத்தில் நடத்துவதற்கு வடக்குக்கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

இப் பரீட்சையில் சித்தியடைந்த பின்வருவோர் குறிப்பிட்ட திகதியில் சமுகமளிக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

சித்தியடைந்தோரின் பெயர் விவரம் வருமாறு:

கே. ஸ்கந்தராஜா— (வலிகாமம் மேற்கு பிரதேச சபை, உப அலுவலகம், சங்கானை.) —பொ. ஜெகநாதன் — (சோமஸ்கந்த கல்லூரி ,புத்தூர்.) கே. அருந்தவராஜ்— (பிரதேச சபை, நல்லூர்.) எஸ்.பத்மராஜா— (செங்குந்தா இந்துக் கல்லூரி ) ஆர். செல்வநாதன்— (பருத்தித்துறை பிரதேச சபை,) திருமதி எம். மகாலிங்கம்—(பிரதேச சபை உப அலுவலகம், நயினாதீவு.) சி. ரி. விஜயகுமார் — (வலிகாமம் மேற்கு பிரதேசசபை, உப அலுவலகம், சுழிபுரம்.) பி. கோடீஸ்வரநாதன்— (அரசாங்க விலங்கு மருத்துவ அலுவலகம், பருத்தித்துறை.) திருமதி ரி. ஸ்ரீஸ்கந்தராஜா— (யாழ்ப்பாணம் மாநகரசபை, பொது நூல் நிலையம்.) ஏ. கே. குமாரசாமி— (பிரதேச செயலகம், பருத்தித்துறை.) வி. மயில்வாகனம்— (நல்லூர் பிரதேச சபை.) எஸ். தியாகராஜா— (வலிகாமம் வடக்கு பிரதேச சபை,) திருமதி எஸ். வதனராணி — (வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.) எஸ். ஐயாத்துரை — (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) என். தங்கவேல்— (நகரசபை, சாவகச்சேரி.) கே. ரங்கநாதன் — (வலி. தென் மேற்கு பிரதேச சபை, உப அலுவலகம், மானிப்பாய்.) திருமதி சி. புஸ்பராணி— (வலி தென் மேற்கு பிரதேச சபை, உப அலுவலகம், மானிப்பாய்.) செல்வி ஐ. ஜே ஜரின் காமல் —(உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.) வி. செல்வரத்தினம்— (உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.) எஸ். தயாபரன் —(வலி. தென் மேற்கு பிரதேச சபை, உப அலுவலகம், மானிப்பாய்.) வி. ஆர். சாமுவேல்— (உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.) ரி. சிறிதரன்— (வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.) எஸ். இராஜரெத்தினம், (வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.) வி. புவனேந்திரன் — (வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்.)

### தட்டெழுத்தாளர்

திருமதி கே. வதனாம்பிகை— (மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், திருநெல்வேலி.) திருமதி எஸ். வதனராணி— (வலி கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.) (இவர் தட்டெழுத்தாளர் எழுதுநர் இரண்டு பரீட்சையிலும் சித்தி எய்தியுள்ளார்.) (ஐ-100)

## அறநெறி விழா ஏற்பாடு பற்றிய கலந்துரையாடல்

நவாலி, ஏப். 17

இந்து சமய அலுவலர்கள் திணைக்களம் இவ் வருடம் இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் என்பனவற்றை ஒன்றிணைத்து அருள் நெறி விழாவினை நடத்துமாறு யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளது.

இவ் விழாவிற்கான முன்னேற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கள் பிற்பகல் 2மணிக்குயாழ். செயலகத்தில் நடைபெறும்.

மேற்படி நிறுவனங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களை தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். அரசஅதிபர் கேட்டுள்ளார் (ஐ-100)

## நல்லைக்குமரன் மலர்

கொழும்புத்துறை, ஏப். 17

யாழ்ப்பாணம்மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வெளியிடும் ''நல்லைக்குமரன் மலர்'' (6 ஆவது மலர்) இவ்வருடமும் வெளிவர உள்ளது.

இளைய தலைமுறையினரிடையே சமயப் பற்றினையும், இறைபக்தியையும்,ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு வழமை போல் இவ்வருடமும் மேற்படி சூழுவினால் வெளியிடப்படவுள்ள ''நல்லைக் குமரன்'' மலருக்குகந்த கட்டுரைகளை, கவிதைகளை துறைசார்ந்த அறிஞர்கள் மற்றும் சமயப் பெரியார்களிடமிருந்து எதிர்பார்ப்பதாக யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும், சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

பொருத்தமான ஆக்கங்களை எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு இவர் கூறியுள்ளார். (ஐ-30)

## வலி. மேற்கு விவசாயிகளுக்கு 'கெயர்' உதவித் திட்டம்

மூளாய், ஏப். 17

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு ''கெயர்'' நிறுவனம் உதவித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

மேற்படி பகுதிகளில் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கே இந்த நிறுவனம் விவசாய உதவிப் பொருள்களை வழங்கியும், விவசாயப் பயிற்சி வகுப்புக்களை நடத்தியும் மேற்படி உதவித் திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகின்றது. இதனால் பல விவசாயிகள் நன்மையடைந்து வருகின்றனர். (ஐ-99)

## யாழ். பல்கலைக்கழக
## வெளிவாரிப் பிரிவில் 6 ஆயிரம் மாணவர் பதிவு

யாழ்ப்பாணம் ஏப். 17

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் 1990 ஆம் ஆண்டு முதல் இதுவரை 6 ஆயிரம் மாணவர்கள் பட்டப் படிப்புகளை மேற் கொள்ளும் பொருட்டு தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் கலைமாணி, வர்த்தகமாணிப் பட்டங்களைப் பெறுவதற்கு இவ்வாறு தம்மைப் பதிவு செய்துள்ளனர் என வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

## "உ" அட்டைக்கு 3 கிலோ சீனி விநியோகம்

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் கட்டமாக மூன்று கிலோ சீனியைப் பங்கீட்டு அட்டைக்கு விநியோகித்து வருகின்றது.

இந்த மூன்று கிலோ சீனி தற்போது ''உ'' பங்கீட்டு அட்டைக்கே வழங்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவு முத்திரைப் புள்ளிகளுக்கு சீனி வழங்கப்பட்டு வருவதாலேயே ''உ'' பங்கீட்டு அட்டைக்கு சீனி வழங்கப்பட்டு வருகின்றது.(ஐ-17)

## மேலதிக நேர கொடுப்பனவு மந்திகை டாக்டர்களுக்கு இல்லை

நெல்லியடி, ஏப். 17

மந்திகை மருத்துவமனையில் பணி புரியும் டாக்டர்களின் மேலதிகநேர வேலைக் கொடுப்பனவை வழங்க சம்பந்தப்பட்ட திணைக்களம் தயக்கம் காட்டுவதனால் இங்கு இரவில் பணி புரியும் டாக்டர்கள் அழைப்புக் கடமை செய்ய மறுத்துள்ளனர்.

இதனால் இரவுநேரத்தில் இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவரும் அவசர நோயாளிகள் யாழ். போதனாமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றார்கள்.

டாக்டர்களது மேலதிக நேரவேலைக் கொடுப்பனவை வழங்க மறுத்துள்ளமையால் டாக்டர்கள் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அழைப்புக் கடமைக்குச் செல்வதில்லை என முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-109-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பயணப் "பாஸ்"

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கப்பல் அல்லது விமான மூலம் பயணம் செய்பவர்களுக்குப் "பாஸ்" வழங்கும் முறையில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

பயணிகள் தமது வசிப்பிடங்களில் இருந்து யாழ்ப்பாணத்தில் (நகரத்தில்) உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வந்து அலைக்கழிவதையும், தரகர்கள் கையில் சிக்கி வீண் சிரமங்களுக்கு ஆளாவதையும் தடுக்கும் வகையில் புதிய நடைமுறைகொண்டு வரப்பட்டுள்ளது; வெகு இலகுவாக்கப்பட்டுள்ளது.

இதுவரை யாழ். சிவில் நிர்வாகம் மேற்கொண்டு வந்த பிரயாண அனுமதிப் பத்திரம் (பாஸ்) வழங்கும் பணி நேற்றுத் தொடக்கம் குடாநாட்டில் உள்ள ஒன்பது பிரிகேட்டுகளுக்கும் பரவலாக்கப்பட்டுள்ளது.

புதிய பரவலாக்கல் முறையினால் நீண்ட காலம் பாஸ் பெறுவதற்குக் காத்திருக்க வேண்டியதில்லை. விமான சேவையைப் பொறுத்தளவில், இரண்டு நிறுவனங்கள் அதனை நடத்துவதினால் விரைவில் பயணம் செய்யும் வாய்ப்பும் அதிகம்.

பயண அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் பணி ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருந்ததால் 1997 ஆம் ஆண்டில் விண்ணப்பித்த பலருக்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. அந்த வருடத்தில் கையளிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான விண்ணப்பங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்களை அந்தந்தப் பகுதி பிரிகேட்டுகளுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

எப்போதும் செய்யாமலிருப்பதைவிட பிந்தியேனும் ஒரு பணியைச் செய்வது பரவாயில்லை என்று சொல்வார்கள். அந்த வகையில் இப்போது பிரயாண அனுமதிப் பத்திரம் வழங்கும் அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால் நகரத்துக்கு வெளியே உள்ள பிரிகேட்டுகள் தாங்கள் குட்டி ராஜாக்கள் ஆகிவிட்டதாக நினைத்துக் கொண்டு மக்களை வேண்டாத தொல்லைகளுக்குள் ஆளாக்காது பார்த்துக் கொள்வது அவசியம்; தாம் போன போக்கினை அதைக் கொண்டு வா; இதனைக் கொண்டு வா; அங்கு போ; இங்கு வா என்று அலைக்கழிக்கக்கூடாது.

பயண அனுமதிப் பத்திரம் வழங்குவது இலகுவாக்கப்பட்டிருப்பினும் பயணிகள் கப்பல் சேவை ஒழுங்காக நடத்தப்படாவிடில் பெரிதாகப் பயன் இல்லை. எல்லோரும் விமானத்தில் பயணம் செய்ய அவர்களின் பொருளாதார நிலைமை இடங்கொடுக்காது.

ஆகையால் கப்பற் சேவையை ஒழுங்காக நடத்துவதுடன் அரசு உடனடி ஏற்பாடுகளைச் செய்வது மிகவும் அவசியம்.

இது விடயத்தி அரசு உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளாவிடில் விமான சேவை மூலம் மட்டும் யாழ்ப்பாண மக்களைச்சுரண்ட விரும்புகிறது என்ற அர்த்தமாகி விடும். அதனை இல்லாமற் செய்வது அரசைப் பொறுத்ததே.

# விபூதி அணிவது நாகரிகமில்லை என்று கருதுவோர் அதன் சிறப்பை அறியாதோரே!

நல்லூர் சி. மணிவண்ணன்

விபூதிதரிப்பதால் இம்மையிற் செய்த பாவம் நீங்குவதுடன் அநேக ஜன்மங்களில் செய்த பாவங்களும் நீங்குகிறது.

கள் அருந்துதல், திருடல், பிரம்மஹத்தியைச் செய்தல் முதலிய பாவங்களைச் செய்தவன் விபூதி எனும் திருநீற்றை அணிந்து ஸ்ரீ ருத்திரத்தை ஜபிப்பதனால் சகல பாவங்களிலிருந்தும் நீங்குகிறான்.

"திருநீறு தரிப்பதனால் பாவத்திலிருந்து ஒருவன் விடுபடுகிறான்; விபூதி தரிப்பதனால் பூதப், பிரேத, பிசாசு முதலியவை அஞ்சி நடுங்கி அலறியோடுகின்றன" என்று மானவபுராணம் கூறுகிறது.

திருநீறு தரிப்பதனால் நோய் நீங்குகிறது. திருநீறு தரிப்பதனால் மங்களம் உண்டாகிறது. திருநீறு அணிவதனால் சுத்தம் ஏற்படுகிறது. திருநீறு அணிவதனால் சிவனடியார்களாக ஆகிறோம்.

திருநீறு அணிந்து சிவசாயுஜ்ய பதவியடைந்தபெரியோர்கள் எண்ணிலர். சுதாமன் என்ற வேதியனும் அவன் தம்பியும் சிவனடியார்களாகிய பிரம்ம விஷ்ணுக்களைக் கடிந்து பேசினர். ஆதலால் பிரம்ம விஷ்ணுக்கள், அண்ணனையும் தம்பியையும் முறையே ஊமையாகவும், முடவனாகவும் சாபமிட, அதனை திருநீறு கொண்டு ததீசி முனிவர் போக்கி நற்கதி அடைவித்தார்.

கூன் பாண்டியனுடைய வெப்பு நோயை திருநீற்றினால் ஞானசம்பந்த சுவாமிகள் தீர்த்தருளினார். இந் நோயை 'மந்திரமாவது நீறு' எனும் பதிகத்தைப்பாடி அதனை தீர்த்து வைத்தார். சமணர்களுடனான அனல் வாதத்தின் போதும், புனல் வாதத்தின் போதும் சமணர் பிரயோகித்த மந்திரஉச்சாடனத்துக்கு எதிராக இந்த திருநீறே மந்திரமும், மேலானதுமாகும் என்ற கருத்தை சம்பந்தப்பெருமான் இப் பதிகத்தின் மூலம் உணர்த்தியுள்ளார்.

விபூதியாகிய திருநீற்றைப் பற்றி நான்கு வேதத்திலும், அவற்றின் விரிவுகளாகிய உபநிடதங்களிலும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளது. திருநீற்றின் சிறப்பையே கூறும் எண்பத்தேழாவது உபநிடதமாகிய "பஸ்மஜாபால உபநிடதம்" என்று ஒன்று தனியாக உள்ளது.

### நாகரிகமில்லையா?

நினைப்பதற்கும் ஒண்ணாதலவும் பெருமையுடைய மஹா விபூதியை(திருநீறு) நம் சைவ சமயத்தில் பிறந்த ஒரு சிலர் அணிவது இல்லை, திருநீறு, உருத்திராட்சம் அணிவது நவநாகரிகமில்லையென்றும் அறியாமையால் கூறுகின்றனர். ஐயோ! என்ன மந்தமதி?

விபூதி அணிவதனால் மும்மூர்த்திக்கும் தலைவனாகிய சிவனாருடைய அடியார்களென்று விளங்குகிறது. தன் மனைவி மஞ்சள் பூசுவதும், தாலி கழுத்தில் கட்டிக்கொண்டிருப்பதும் நாகரிகமில்லையென்று நினைப்பவன் தாழ்ந்தவனாக அல்லவா ஆகிறான்? "எதை விட்டாலென்ன? அணியாவிட்டாலென்ன? என்று அறியாமை காரணமாக வாய் வேதாந்தம் பேசுகின்றனர். ஐயோ! தன் நெற்றியை அவர்கள் பார்த்ததில்லை போலும். "பிரம்ம தேவர் சிருஷ்டி செய்யும் போது திருநீற்றின் பெருமையைக் கூறி அதை அணிந்து கொள்வதற்காகவே நெற்றியை குறுக்காகப் படைத்தார். நெடுக்காகவும் மற்ற விதமாகவும் படைக்கவில்லை. சந்தேகம் உள்ளவர்கள் கண்ணாடியின் முன் நின்று நெற்றியைப் பார்த்துக் கொள்ளட்டும்.

நெற்றியின் அமைப்பைப் பார்த்த பின்னரும் திருநீறு அணிவதானால் ஒன்றும் பயனில்லை என்று கூறுகிறவனைத் தேர்ந்தெடுத்த மூடர்களுக்கெல்லாம் அரசனென்று கூறுவது இழுக்காகாதன்றோ?" —என்ற கருத்து கூர்ம புராணத்தில் இடம் பெற்றுள்ளது.

சூடாமணி நிகண்டராகிய பண்டல புருடர் சமண சமயத்தினராயினும் விபூதியையே சிறப்பித்து, "திருநீறே பற்பம் பொடியொடுக் காப் பாம் புண்ணிய சாந்

## ஞானக் கதிர்

தாஞ்சாணி" என்று கூறியுள்ளார். கிறிஸ்தவ சமயத்தவரும் விபூதித் திருநாள் என்று வருடத்தில் ஒரு நாளை திருநீற்று சாம்பலை அணிந்து கொண்டாடுகிறார்கள். இந்நாளில் திருநீற்றுக்கே அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஔவைப் பிராட்டியார், 'நீறில்லா நெற்றி பாழ்" என்றனர்.

இரு பிறப்பிலும் பாவம் செய்பவர்களுக்குத்தான் திருநீற்றினிடத்தில் துவேஷம் உண்டாக்கும். திருநீற்றின் பெருமையைப் புரிந்து கொள்ளாதவர்களின் அறிவின் கூர்மையை என்னவென்று எழுதுவதென்று தோன்றவில்லை. அவர்களிடத்தில் என்ன தான் இருக்கிறதோ தெரியவில்லை!

★

# கசிப்பு உற்பத்தி மினிசினிமா கட்டுப்படுத்தத் தீர்மானம்

திருநெல்வேலி, ஏப். 17

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் பெருகி வரும் மனித உயிர்க் கொல்லியான கசிப்பு உற்பத்தி விற்பனையைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுவது என்றும்—

மாணவர்களின் கல்விக்கு பாதிப்பை ஏற்படுத்தி கலாசார சீரழிவை உருவாக்கும் மினி சினிமாக்களைக் கட்டுப்படுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ளுவது என்றும்—

கடந்த வாரம் நடைபெற்ற வலி.கிழக்கு சனசமூகநிலையங்களின் சமாஜத்தின் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் சமாஜத் தலைவர் மு. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இப் பிரிவிலுள்ள 40-க்கு மேற்பட்ட சனசமூக நிலையங்களும் மற்றும் பொது நல அமைப்புகளும் பங்கு பற்றின,

வலி. கிழக்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. தவநாயகம், வலி. கிழக்கு பிரதேசசபை செயலாளர் க. குகதாசன் வலி. கிழக்கு ஈ.பி.டி.பி. அமைப்பாளர் வீ. ரவி, ஈ. பி. டி. பி. அமைப்பைச் சேர்ந்த என். நிசாந்தன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இதில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடுப்பது பற்றியும், மினிசினிமாக்களைக் கட்டுப்படுத்துவது பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நடவடிக்கை மேற்கொள்ளவும் செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் இந்தச் செயற்குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-135)

## அமைதி வேண்டி பிரார்த்தனை

கொழும்புத்துறை, ஏப். 17

வடலியடைப்பு இந்து இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடன் வடலியடைப்பு அருள் மிகு ஸ்ரீபாரத்தனை ஐயப்பன் ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 4.30 மணி முதல் 5.30 மணிவரை நாடு நலம் பெறவும், மக்கள் அமைதியுடன் வாழவும் வேண்டி கூட்டுப் பிரார்த்தனை நடத்தப்பட்டு வருகின்றது. (ஐ-30-9)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை. ஏப். 17

குடாநாட்டில் அறநெறிப் பாடசாலைகளை நடத்தி வரும் ஆசிரியர்களுக்கும், ஆசிரிய நியமனத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குமான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் அனுசரணையுடன் நடைபெறும். (ஐ-30)

## நாளை

சித்திரை -05

சனிக்கிழமை

திதி: ஷஷ்டி
முற்பகல் 10.12 வரை
நட்சத்திரம்: பூராடம்
முன் இரவு: 5.08 வரை
சுபநேரம்: 3.03-4.33
ராகு காலம்: 09.03- .10.33
(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

## சிமெந்து விநியோகம்

வலி.மேற்கு, ஏப். 17

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மண் குடிசைகளில் வாழும் மக்களுக்கு வீடு கட்டுவதற்கு சிமெந்து விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தூண் அமைத்தல், நிலம் அமைத்தல் போன்ற வேலைகளைச் செய்வதாக உறுதி வழங்குபவர்களுக்கே இந்தச் சிமெந்து வழங்கப்பட உள்ளது. (ஐ-99-9)

## தபாற் சேவை சீர்குலைவால் யாழ்ப்பாண மக்கள் பாதிப்பு

கொழும்பில் தபால் திணைக்கள ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கை காரணமாக யாழ். மாவட்டத்திற்கான கடிதங்கள் வந்து சேர்வதில் நீண்ட தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒருமாத காலமாக வெளிமாவட்டக் கடிதங்கள், வெளிநாட்டுக் கடிதங்கள், பதிவுத் தபால்கள் என்பன இங்கு மிகவும் குறைந்தளவிலேயே வந்துசேர்கின்றன.

இதேவேளை— யாழ். மாவட்டத்திலிருந்து கடிதங்கள் வழமைபோல கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருவதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்பிலிருந்து கடிதங்கள் உரிய காலத்தில்கிடைக்காமையால் யாழ். குடாநாட்டு மக்களுக்கு பல்வேறு வகையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

## முச்சக்கரவண்டி அன்பளிப்பு

யாழ். செயலக சமூக சேவைத்திணைக்களத்தினால் 25 ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில்இந்நிகழ்வு நடைபெற்றது

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து பெறப்பட்ட நிதி மூலமே இவை வழங்கப்பட்டன. (ஐ-30)

### உதய வாக்கு

தரித்திரனாயிருக்கும் போது திருப்தியடையாதவன் செல்வனான போதும் திருப்தியடையான்; திருப்தியடையாமை மனக் குற்றமேயன்றிப் பொருட் குற்றம் அன்று.

— நாவலர்

## எலுமிச்சையில் இலைசுருட்டி நோய்

குடாநாட்டில் தற்பொழுது எலுமிச்சை பயிர்களில் ஒருவகை இலைச்சுருட்டி நோய் பரவி வருகின்றது. இந்நோய் காரணமாக எலுமிச்சையில் பூப்பதுவும், காய்ப்பதுவும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. காய்க்கும் காய்கள் கூட மிகவும் சிறியதாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக எலுமிச்சை பயிர்ச் செய்கையாளர்களின் வருமானம் மிகவும் குறைந்துள்ளது. (ஐ-30-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொல்பொட் காலமானார்



கடந்த ஆண்டு 'கெமரூச்' கெரிலாக்களால் கைது செய்யப்பட்ட பொல்பொட் விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட காட்சி.

அன்லொங் வெங், ஏப். 17



**கம்போடியாவின் முன்னாள் சர்வாதிகாரியும் கெமரூச் இயக்கத்தின் முன்னாள் தலைவருமான பொல் பொட் (வயது 70) மாரடைப்பால் காலமானார் என்று அறிவிக்கப்படுகிறது.**

**தாய்லாந்து எல்லையில் கெமரூச் கெரில்லாக்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி ஒன்றில் புதன்கிழமை இரவு மரணம் சம்பவித்ததாக தாய்லாந்து இராணுவஅதிகாரிகள் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.**

பொல்பொட்டின் மரணம் குறித்த செய்தியை தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் உடனடியாக ஊர்ஜிதம் செய்யவில்லை. மேலதிக விவரங்களுக்காக காத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

பொல்பொட்டின் மரணத்தை ஊர்ஜிதம் செய்வதற்காக இராணுவ அதிகாரிகள் எல்லையைக் கடந்த 'கெமரூச்' கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல இருந்ததாக நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது.

பொல்பொட் மரணமானதாக ஏற்கனவே பல தடவைகள் செய்திகள் பரப்பப்பட்டதுண்டு.

கெமரூச் கெரில்லாக்களினால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த பொல்பொட் கடந்த பல மாதங்களாக கடும் நோய்வாய்ப்பட்டிருந்தார். கம்போடியாவை 1975 - 79 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது சர்வாதிகாரப் பிடியின் கீழ் வைத்திருந்த அவரது ஆட்சியில் 10 லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மனித குலத்துக்கு எதிராக பொல்பொட் புரிந்த இந்தப் படுபாதகச் செயலுக்காக அவர் சர்வதேச நீதிமன்றில் விசாரிக்கப்பட இருந்தார்.

'கெமரூச்' இயக்கத்தை உருவாக்கி அதன் சக்தி மிக்க தலைவராக விளங்கிய பொல்பொட் கடந்த ஆண்டு இயக்கத்துக்குள் ஏற்பட்ட பிளவுகளை அடுத்து கெமரூச்சின் இராணுவத் தளபதி டமொக்கினால் கைது செய்யப்பட்டார். இராணுவ விசாரணையின் பின் வீட்டுக் காவலில வைக்கப்பட்ட அவர் பின்னர் தப்பிச் சென்று விட்டதாக முன்னுக்குப் பின் முரணான செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன.

இந்நிலையில் பொல்பொட்டை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தருணத்தில் அவரது மறைவுச் செய்தி வெளியாகிஉள்ளது.

பொல்பொட்டை கைது செய்வதில் அண்மைக்காலமாக அமெரிக்காவும் தீவிர அக்கறை செலுத்தி வந்தது. (ஐ)

## மண்டை ஓடு இல்லாத அதிசயக் குழந்தை

சென்னை, ஏப். 17

தென்னிந்தியாவின் வந்தவாசி பகுதியில் மண்டை ஓடு இல்லாத குழந்தை ஒன்றைப் பெண் ஒருவர் பிரசவித்துள்ளார். அந்தக் குழந்தையின் நெற்றிப் பகுதியில் இருந்து தலையின் பின்புறக் கழுத்துப் பகுதிவரை மண்டை ஓடு இல்லை. மெல்லிய தோல் ஒன்றினாலேயே தலை மூடப்பட்டுள்ளது. உள் உறுப்புகளின் செயற்பாட்டை அந்தத் தோலின் ஊடாக அவதானிக்க முடிகிறது. தலையை மூடியுள்ள தோலில் தலைமுடியும் காணப்படவில்லை.

இந்த அதிசயக் குழந்தையை வேடிக்கை பார்ப்பதற்காக அயற் கிராமங்களில் இருந்து ஏராளமானோர் கூடிவருகின்றனர். (ஐ-10)

## தாக்கரே புதிய தலைவர்

புதுடில்லி, ஏப். 17


பாரதீய ஜனதாக் கட்சியின் புதிய தலைவராக குஷபாவ் தக்கரே ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த அவர் அரசியல் வாழ்க்கைக்காக திருமணம் செய்து கொள்ளாதவர். டாக்டராக வர வேண்டும் என்ற ஆசையையும் துறந்து ஆர். எஸ். எஸ். அமைப்பில் முழுநேரத் தொண்டராகச் சேர்ந்தார்.

பாரதீய ஜனதா தோன்றிய போது கட்சியின் தேசிய செயலராகத் தேர்வு செய்யப்பட்டார். 1984இல் கட்சியின் துணைத் தலைவர் ஆனார். 1986 முதல் 1992 வரை பொதுச் செயலர் பதவி வகித்தார்.

உத்தரப் பிரதேசத்திலும் வடகிழக்கு மாநிலங்களிலும் கட்சி வலுப்பெற பணியாற்றினார். கட்சித் தலைவர்களின் நம்பிக்கையையும் தொண்டர்களின் ஆதரவையும் பெற்ற எளிமையான தலைவர் அவர்.

## தென்னாசியாவில் அணு ஆயுதப்போட்டி ஏற்படாது என்கிறார் பிரதமர் வாஜ்பாய்!



கௌகாத்தி, ஏப். 17

நெடுந்தூரம் பாயும் ஏவுகணை ஒன்றை பாகிஸ்தான் பரிசோதித்துப் பார்த்திருப்பது குறித்து இந்தியா பெரிதாக அலட்டிக் கொள்ள மாட்டாது— என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்திருக்கிறார்.

இந்தவிவகாரம் தென்னாசியாவில்அணு ஆயுதப் போட்டியை உருவாக்கும் என்ற கருத்தையும் அவர் நிராகரித்தார்.

அஸாம் மாநிலத் தலைநகர் கௌகாத்தியில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய போதே பிரதமர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் கவுரி (GHAURI) ஏவுகணைச் சோதனையை இந்தியா பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டாது. அயல் நாடுகளில் இருந்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை அதே அளவுக்கு எதிர்கொள்ளும் ஆற்றல் இந்தியாவுக்கு இருப்பதால் இந்த விடயம் குறித்து பீதியடையவில்லை. இந்த ஏவுகணைப் பரிசோதனையால் தென்னாசியாவில் அணு ஆயுதப் போட்டி தொடங்கிவிடும் எனக் கருதுபவர்கள் முற்றிலும் தவறான கருத்தையே கொண்டுள்ளனர். இந்த நிலைமைக்கு பக்குவமாகவும், பொறுப்புடனும் இந்தியா பதில் கொடுக்கும். தன்னுடன் பகைமை கொண்டுள்ள எந்த ஒரு நாடும் தயாரிக்கும் ஆயுதத்தை தயாரிக்கும் ஆற்றல் இந்தியாவிடமும் உள்ளது. இதற்குமேல் ஒன்றும் கூற முடியாது. இந்தியாவுக்கு உண்மையான அச்சுறுத்தல்கள் உள் நாட்டில் தான் உள்ளன. எனவே தேசியக் குறிக்கோளை அடையும் முயற்சிக்கு நாட்டில் ஒற்றுமை உணர்வே அவசியம் என்று வாஜ்பாய் தெரிவித்தார்.

(ஐ)


வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
ஊழியர் நலன்புரிச் சங்கம்-கரவெட்டி

சீட்டிழுப்பு முடிவுகள்:–

1 ஆம் பரிசு 588
2 ஆம் பரிசு 2957
3 ஆம் பரிசு 4391

ஆறுதல் பரிசுகள்:–

4595, 3084, 3555, 1594, 4797

சீட்டிழுப்புக்கு உதவிய அனைவருக்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

-தலைவர்

(சி/3471)

தேவை

போட்டோ ஸ்ரற் பிரதி செய்யும் வேலை பழகுவதற்கு பெண்கள் இருவர் தேவை. நேரில் சமுகந்தரவும்.

சன்லைற்
றைக்கிளினேர்ஸ்,
பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

(54915)

வடமராட்சி ரோட்டறக்ற் கழக
நிதிக்கான
அதிர்ஷ்டலாப சீட்டு முடிவு

1 ஆம் பரிசு — 1416
2 ஆம் பரிசு — 1349
3 ஆம் பரிசு — 2349

ஆறுதற் பரிசுகள்:

2319 1037 3616 2585 4486
5465 4489 2647 5194 2639

– தலைவர்

(54971)

பிற்போடப்பட்டுள்ளது

நெல்லியடி இராஜகிராம கரவை சுடர் வி. கழக
நிதிக்கான
14—04—98 அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு குலுக்கல் தெரிவு தவிர்க்கமுடியாத காரணத்தால் தீபாவளி தினத்தன்று 19—10—98 குலுக்கப்படும் என்பதனை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

(54968) – நிர்வாகம்

மாதாந்த பயிற்சிப் பரீட்சை

வினாத்தாள்களும்–புலமைப்பரிசில் வினாத்தாள்களும் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

BOND
யாழ். நகர்

(54936)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சந்திரமதி சிவானந்தன்
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி சதாசிவம் சாரதாம்பாள்

மட்டு நகரில் காலமாகியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அபிவிருத்திச்சங்கம்.

திருநெல்வேலி
றோ.க.த.க.பாடசாலை.

(54974)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் லயன்ஸ் கழகத்தின்
நலிந்தோர் சேவைத்திட்ட நிதிக்காக
யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட
மாணவர் ஒன்றியம்
மேடையேற்றும்

## விழிச்சுடர்

என்னும் சிறந்த மேடை நாடகம்.

இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்
நாள்: 18 - 04 - 1998 (சனிக்கிழமை)
நேரம்: காலை 10. 30 மணி மாணவர்களுக்கு.
மாலை 3. 30 மணி நலன்விரும்பிகளுக்கு

நுழைவுச் சீட்டு: மண்டப வாயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.
100/-, 50/-, 20/-

நாடகக்கரு: அழகியர் வேடத்தில் அரக்கர் இருவர் செல்வம் கொழிக்கும் நாடொன்றினுள் புகுந்ததால் ஏற்பட்ட அனர்த்தங்களைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் இந்த நாடகத்தைக் காணத்தவறாதீர்கள்.

சகல லயன்ஸ் கழக அங்கத்தவர்களும், குடும்பசமேதரர்களாக தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விளம்பர அன்பளிப்பு:-
**கரன் ரெக்ஸ்ரைல்ஸ்,**
பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.
(சி/3472)


## ஓராம் ஆண்டு நினைவு அஞ்சலி

**சிவபுண்ணியம்**
**வள்ளியம்மா** [பவளம்]

மலர்வு: 18-05-1948
உதிர்வு: 28-04-1997

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசமுடன் எம்மை வழிநடத்தி பாரினில்
எம்மை இன்புற வைத்து விட்டு மீளாத்துயிலில்
மின்னல் போல் சென்று மறைந்தீரே அம்மா!
உங்கள் மறைவு எங்களால் மறக்க முடியவில்லையே!
மீண்டு நீங்கள் ஒரு முறை வருவீரோ என எண்ணி
சென்ற வழியைப் பார்த்து கதிகலங்கி நிற்கின்றோம்!

சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
மொட்டையை தோட்டம்,
நவிண்டில்.
(54981)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 10 — 12 — 1944



மறைவு: 17 — 03 — 1998

திருமதி
**சாவித்திரி நவரெத்தினம்**

(இளைப்பாறிய. தையல் போதனாசிரியை தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம் – வவுனியா)

எம்மை விட்டுப் பிரிந்த எமது இல்லக்தரசியின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியம் 17 - 04 - 98 இல் வவுனியாவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றது.

இத்தருணத்தில் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் சகல உதவிகளைச் செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செ. நவரெத்தினம் (கணவன்)
ந. சாலினி (மகள்)
ந. சஞ்சீவ் [மகன்]
ந. கபிலநாத் [மகன்]

சோயா லேன்,
யாழ். வீதி,
வவுனியா.
(54956)

# மனித உரிமை மீறல் விசாரணையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் வசதிகளை மேம்படுத்தி மனித உரிமை மீறல் சம்பந்தமான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கிளை அலுவலகத்தினால் நடத்தப்படுகின்ற விசாரணைகளை விரிவுபடுத்துமாறு பாதிக்கப்பட்டவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளரைக் கோரியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணக் கிளைஅலுவலகம் காணாமற் போனோர் தொடர்பான தகவல்களை அவர்களது உறவினருக்கு பெற்றுத்தர உதவுகின்றது. அத்துடன் கைது செய்யப்படுகின்றவர்கள் தொடர்பான தகவல்களையும் அவர்கள் எந்த முகாமில் தடுதது வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரங்களையும் சம்பந்தப்பட்டோருக்கு பெற்றுத் தரும் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. (இ-5–ரி)

## சங்கீத சபை பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்.17

வட இலங்கை சங்கீத சபையால் நடத்தப்படும் பரீட்சை நேற்று கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஆரம்பமானது.

இப்பரீட்சைக்கான ஆவணங்கள் கொழும்பு சென்றடையாத காரணத்தாலேயே பரீட்சை நேற்று அங்கு நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
(இ–5–ரி)

## விவசாயகுழு கூட்டம்

நவாலி, ஏப். 17

யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 11. 30 மணிக்கு யாழ். செயலக மண்டபத்தில் நடைபெறும்.
(இ–100)

## இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 17

உடல் முழுக்க தீப்பற்றி எரிந்து இளம் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

பருத்தித்துறை, சந்தை ஒழுங்கைப் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

வி. விஜயகுமாரி(வயது 24) என்ற இளம் பெண்ணே மரணமானவராவார்.

தீப்பற்றி எரிந்து ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

அம்புலன்ஸ் வாகனத்தில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும்போதே இடையில் மரணமானதாக தெரிவிக்கப்பட்டது.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ–139–15)

## செயன் முறைப் பரீட்சை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 17

ஜி. சீ. ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான தொழில் நுட்பம் பாட நெறிகளின் செயன் முறைப் பரீட்சைகள் நாளையும், நாளை மறுதினமும், 20 ஆம் திகதியும் நடைபெறும்.

மனைப் பொறியியல் பாடநெறிக்கான பரீட்சைகள் நாளை 18 ஆம் திகதியும்—

விவசாயம், விலங்குப் பராமரிப்பு பாட நெறிகளுக்கான பரீட்சைகள் நாளை மறுதினம் 19 ஆம் திகதியும் —

கட்டட நிர்மாணம், இயந்திரவியல் தொழில் நுட்பம், நுண்கலை, மின் இலத்திரனியல் ஆகிய பாடங்களுக்கான செயன் முறைப்பரீட்சைகள் 20 ஆம் திகதியும் — நடைபெறும். (இ-5-ரி)

## இதய அஞ்சலி

வலிதெற்கு பிரதேச சபை செயலாளர்
திரு. தி. கனேஸ்வரன் அவர்களின்
அன்பு மகன்
**செல்வன் க. பகீரதன்**
(ஊழியர், உப அலுவலகம், உடுவில்)

காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
வலிதெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
(54986)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் மேற்பார்வையாளர்
திரு. க. செல்வரத்தினம் அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி கந்தன் சீதேவி**

அவர்கள் 16 – 04 – 98 இல் காலமாகிவிட்டார்.

அவரது பிரிவால் வாடும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
தெல்லிப்பழை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை,
(54988)

## பிற்போடப்பட்டுள்ளது

தெல்லிப்பழை ப. தெ. வ. அ. கூ. சங்கப் பணியாளர் நலன்புரிச் சங்கத்தினரால் 14 – 04 – 98 அன்று நடத்தப் படவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— நிர்வாகிகள்
(54987)

## இதயக் குமுறல்

செல்வன்
**கணேஸ்வரசர்மா பகீரதன்**
எமது சக உத்தியோகத்தர்

பண்பாய் பாசமாய்
பரிவுடன் பழகிவிட்டு
பாதியினில் எமை பரிதவிக்க விட்ட பகீரதா!
பகிர்கின்றோம் எம் இதயக் குமுறலை
பாரினுக்கு எடுத்துரைக்க முடியாமல்.

பொறுப்பதிகாரியும்,
சக உத்தியோகத்தர்களும்.
வலி. தெற்கு பிரதேச சபை,
உப அலுவலகம், உடுவில்.
(50035)


## லிங்கம் தொலைபேசி

மகத்தான துரிதகதி வெளிநாட்டு தொலைபேசிச் சேவை இன்று முதல் ஆரம்பம். இன்று மட்டும் விசேட சலுகை உண்டு. உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசித் தொடர்புகளை உடனுக்குடன் இலவசமாக உங்கள் இல்லங்களுக்கு வந்து அறியத் தரப்படும்.

தொலைபேசி இலக்கம்: 070 – 212227

**லிங்கம் தொலைபேசி**
மானிப்பாய் வீதி,
தாவடி.
(50034)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிக்குஞ்சு பிடிக்க ஏறிய சிறுவன் மரணம்

நவாலி, ஏப். 17

கிளிக்குஞ்சு பிடிக்கத் தென்னை மரத்தில் ஏறிய சிறுவன் தென்னை மரம் முறிந்து வீழ்ந்ததினால் துடிதுடித்து மரணமானார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் 7 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் பாலசிங்கம் பிரகாஸ் (வயது 12) என்பவரே மரணமானவராவார்.

நவாலியிலுள்ள அவரது வீட்டின் பின்புறக் காணியில் நின்ற தென்னைமரப் பொந்தில் இருந்த கிளியைப் பிடிப்பதற்கு ஏறியபோதே இப் பரிதாப சம்பவம் நிகழ்ந்தது. (இ–100)

## தென்மராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதுகள்தொடர்பாக ஒரு மாதத்தில் 13 அல்லது 14 முறைப்பாடுகள் கிடைப்பதாகவும் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கைது செய்யப்பட்டவர்களின் நிலை பற்றி அவர்களது உறவினர்களுக்கு அறிவித்து வருவதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5-ரி)

## பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்)

முடிவடைந்த பின்பு மேலும் ஒரு வருடம் பதவியில் நீடிப்பு மக்கள் ஆணையை மீறும் செயலாகும். இதனை ஏற்க முடியாது. சபை கலைக்கப்பட வேண்டும். இனப்பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் தான் இத்தீர்மானம் எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-21)

## சமய சந்நிதியில்

அனலையம்பதி – புளியந்தீவு அருள்மிகு ஸ்ரீ நாகராஜேஸ்வரி, அம்பிகாதேவி சமேத ஸ்ரீ நாகேஸ்வரன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 29ஆம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி அடுத்த மாதம் 2ஆம் திகதி எண்ணெய்க் காப்பு சாத்துதலும், மறுநாள் காலை 6.42 மணிக்கு கும்பாபிஷேகமும் இடம் பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும்.

''வேதாகம மாமணி'' சிவஸ்ரீ பாலவைத்தியநாத சிவாச்சாரியார் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (இ-3)

★ ★ ★

இளவாலை புனித நீற்றம்மா ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் நிறைவு பெறும். (ஐ–51)

★ ★ ★

பளை நரசிங்க வைரவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (ஐ–117)

## லங்கா...

(முதலாம் பக்கத் தொடர்)

வரும் பணியில் ஈடுபடும் 'லங்காமுடித' கப்பல்மூலமே இந்தச் சேவை நடத்தப்படும் என்றும் —

இருதடவைகள் இக்கப்பல் சேவையில் ஈடுபட்டு 2 ஆயிரம் பேரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.


# கண்ணீர் அஞ்சலி

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையின் வலிமேற்குப் பிரிவு பகுதித் தலைவர்

சிவஸ்ரீ சு. சுந்தரராஜாக்குருக்கள் அவர்களின்

சகோதரி

## திருமதி இராமசிவம் தங்கரத்தினம்

அவர்கள் இந்தியாவில் இறைபதம் அடைந்தமையை இட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அகில இலங்கை சைவக் குருமார்
அர்ச்சகர் சபை.

நாயன்மார்கட்டு,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி/3475)



## Sri Murugan Tele Communication

அமைதியான சூழலில்;

உள்நாட்டுடனும், வெளிநாட்டுடனும்

தொடர்பு கொள்ள அணுக வேண்டிய இடம்.

# ஸ்ரீ முருகன்
# தொலைத் தொடர்பு சேவை

இல: 303, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைத் தொடர்பு இல: 021 – 2670

இரவு பகல் சேவை

தங்குமிட வசதிகள் உண்டு. (54963)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 17 -04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


### கல்வி அமைச்சு கட்டமைப்பு மறுசீரமைப்பு:

# தமிழ், முஸ்லிம் அதிகாரிகள் உயர்பதவி இழக்கும் நிலை!

## தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கிறது

கொழும்பு, ஏப். 17

எதிர்காலத்தில் ஒரு தமிழரோ, முஸ்லிமோ மேலதிக கல்விப் பணிப்பாளர் மட்டப் பதவியையே அமைச்சில் வகிக்கலாம். பணிப்பாளராகவோ அல்லது பிரதிக் கல்விப்பணிப்பாளர் நாயகமாகவோ பதவி வகிக்கக் கூடிய வாய்ப்பு எதிர்காலத்தில் இருக்க மாட்டாது.

இவ்வாறு கல்வி, உயர் கல்வி அமைச்சின் மறுசீரமைக்கப்படும் புதிய கட்டமைப்பு அமைவதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

புதியகட்டமைப்பில் தமிழ் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நாயகம், தமிழ்ப்பிரிவு கல்விப்பணிப்பாளர், முஸ்லிம் பாடசாலைகளின் பிரிவுக் கல்விப்பணிப்பாளர், தமிழ் மொழி கல்விப்பணிப்பாளர் தோட்டப்பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவு கல்விப் பணிப்பாளர் முதலிய பதவிகளே இவ்வாறு ஒழிக்கப்படுகின்றன.

பிரிவினாக் கல்விக்கு ஒரு கல்விப் பணிப்பாளர், இணைப் பாட விதானத்திற்கு ஒரு கல்விப்பணிப்பாளர் நியமிப்பதற்கு இடமளிக்கும் புதிய கட்டமைப்பு தமிழ்மொழி மூலக் கல்விக்கு ஒரு கல்விப் பணிப்பாளர் நியமிக்காமல் விட்டுள்ளமை தமிழின மக்களை அரசு கல்வியில் ஓரங்கட்டத்துணிந்து நிற்கின்றது என்பதனைத் தெட்டத்தெளிவாக எடுத்து காட்டுகின்றது.

இந்த விடயத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விரைவாக ஜனாதிபதி கல்வி உயர்கல்வி அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வருமென்றும் சங்கத்தின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ–8-10)

## புலிகளை---

(முதலாம் பக்கத் தொடர்)

னத்தில் நேற்று முன்தினம் நடந்த இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:

லண்டனில் விடுதலைப் புலிகள் அமைப்பினர் நிதி திரட்டி வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும், பயங்கரவாதத்தை அடக்குவது பற்றிய ஐ. நா. அமைப்பின் புதிய சாசனத்தின் கீழ் தனக்குள்ள கடப்பாடுகளை பிரிட்டிஷ் அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என்றும் நாம் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் தெரிவித்திருந்தோம்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றி நாம் முறைப்பாடு செய்யும் போதெல்லாம் பிரிட்டிஷ் சட்டத்தை மீறும் அல்லது வட அயர்லாந்து கிளர்ச்சி நடவடிக்கைகளில் சம்பந்தப்படும் அமைப்புகளுக்கு எதிராக மாத்திரமே நடவடிக்கை எடுக்கமுடியும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறி வருகிறது.

இது விடயத்தில் நட்பு நாடு ஒன்றிடம் எதிர்பார்க்கப்படுவதை விட குறைவான ஒத்துழைப்பையே பிரிட்டிஷ் அரசு எமக்கு வழங்கி வருகிறது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகம் லண்டனில் இயங்குகின்றது. அச்செயலகம் மூலம்தான் நிதி சேகரிப்பு மட்டுமன்றி சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது.

எம்மைப் போன்றுதான் எகிப்து. அல்ஜீரியா போன்ற நாடுகளும் பிரிட்டன் மீது குற்றம் சுமத்துகின்றன. அந் நாடுகளின் தீவிரவாதிகளுக்கும் பிரிட்டன் புகலிடம் வழங்கியுள்ளது என்று அந் நாடுகள் கூறுகின்றன.

—இப்படி அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறினார். (இ–3–7–21)

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்)

மேற்கொண்ட இந்தக் குழுவுடன் நோர்வே அரச அதிகாரிகள் பேச்சு நடத்தினர்.

''இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண முடியும் என்றே எமது அரசாங்கம் கருதுகின்றது. பேச்சுக்களை ஆரம்பிக்க பின்னணி உதவிகளைவழங்க நாம் தயாராக விருக்கின்றோம்'' என்று நோர்வே அதிகாரிகள் இலங்கைக் குழுவினரிடம் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (இ-3)

# அறக்கட்டளை நிதியத்தின் மூலம் 85 பேருக்கு உதவிப் பொருள்கள்

சின்னப்பு அறக்கட்டளை நிதியத்தினால் அளவெட்டியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 85 பேருக்கு உடுபுடைவைகள், பணம் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னப்பு தம்பதிகள் மலேசியாவுக்குச் சென்று வாழ்ந்த காலத்தில் அளவெட்டி மக்களுக்கு உதவி வழங்கும் பொருட்டு ஒரு குறிப்பிட்ட தொகை நிதியினை வங்கியில் வைப்புச் செய்து அதன்மூலம் ஒவ்வொரு வருடமும் அளவெட்டிமக்களுக்கு உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

அளவெட்டிப் பாடசாலைகளுக்கும், வறிய மக்களுக்கும் இந்த அறக்கட்டளை நிதியத்தின் மூலம் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

புதுவருடத்தையொட்டி அண்மையில் உதவிப்பொருள்கள் வழங்கும் வைபவம் இளைப்பாறிய அதிபர் எஸ். விஸ்வநாதன் தலைமையில் அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசும் அவரது பாரியாரும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டு அறக்கட்டளை நிதி உதவிகளை மக்களுக்கு வழங்கினார்கள். (இ–5)

# பஸ்சேவை நேரத்தை மாற்றக் கோரிக்கை

தென்மராட்சி, ஏப். 17

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் அண்மையில் சேவைலீடுபடுத்தப்பட்டுள்ள கனகம்புளியடி ஊடாக கொடிகாமம் வரை பிற்பகல் 4–00 மணிக்குப் புறப்படும் பஸ் சேவை பிற்பகல் 4–30 க்கு புறப்பட செய்யுமாறு இப்பகுதி மக்கள் போக்கு வரத்துச் சபை முகாமையாளருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

இப்பஸ் பிற்பகல் 4–00 மணிக்கு புறப்படுவதால் அரச ஊழியர்கள், யாழ். வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களைப் பார்வையிட வருவோர் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ–117)

## காயமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

ளான சம்பவத்தில் கடுமையாக காயமுற்று கொழும்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் அங்கு மரணமடைந்தார்.

இந்தவிபத்தில் காயமுற்ற பொறியியல் பீட மாணவர் ஒருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட போது வழியில் மரணமடைந்தது தெரிந்ததே.

இவருடன் பயணம் செய்த மற்றைய நபர் படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியிலும், பிரஸ்தாபசிப்பாய்காயமுற்று கொழும்பு ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

அவ்வாறு கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கருணாரட்ணகே வசந்தராஜ கருண என்ற சிப்பாயே மரணமாகி உள்ளார் என யாழ். நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ–9)

## பரீட்சை

யாழ். சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையில் இன்றும் நாளையும், 24 ஆம், 25 ஆம் திகதிகளிலும் அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

தொழில் வங்கி மூலம் பதிவு செய்யப்பட்டவர்களே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## 2 பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஏப். 17

நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் இரண்டு தபாற் பொதிகள் மட்டுமே எடுத்து வரப்பட்டன.

கொழும்பில் இடம்பெற்று வரும் தபால் திணைக்கள ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் தபால்கள் தரம் பிரிப்பின்றி தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ–134)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்)

வரும்படி துண்டு வெட்டி அனுப்பப்பட்டதாகவும் —

நேற்று முன்தினம் 15 ஆம் திகதி மீண்டும் அவர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

15 ஆம் திகதி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த இந்த நோயாளி அகோர காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும், நேற்றுக் காலை 6 மணிக்கு இரத்தப்பரிசோதனையை மேற்கொள்ள, இரத்தம் எடுக்கச் சென்ற வேளையே காணாமற் போயிருந்ததாகவும் கூறப்பட்டது.

அவர் விழுந்து கிடந்த ஆள் அளவு ஆழம் உடைய அக்கிடங்கில் சுமார் ஓர் அடி உயரத்துக்கு தண்ணீர் இருந்தது.

நோயாளி மீட்கப்பட்டவுடன் ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். (இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org